விலை ரூபா 1.25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 12 ஸபர் 24 இதழ் 261

யாழ்ப்பாணம் புதன்கிழமை 29-10-1986

இலங்கை இனப்பிரச்னைக்கு காணப்படும் அரசியல் தீர்வு:

## "தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யவேண்டும்"

### அமைச்சர் எஸ். ராமச்சந்திரன்

மதுரை, அக் 28

இலங்கை இனப்பிரச்னைக்குக் காணப்படவுள்ள அரசியல் தீர்வு. இலங்கைத் தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவகையில் இருக்க வேண்டுமென்றும், இவ்விடயத்தில் இலங்கை ஆக்கபூர்வமான முறையில் அணுகவேண்டும் என்றும் தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் எஸ். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்னை தீர்வுக்கான விடயத்தில் நல்லதொருதீர்வு ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசும், தமிழ்ப்போராளிகள் குழுக்களும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் இருக்கவேண்டுமென்றும் அவர் கூறினார்.

மதுரையில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

(9ம் பக்கம் பார்க்க)

● மட்டு. கமாண்டோக்களின் ரோந்து கவச வாகனம்மீது

# புலிகள் கண்ணிவெடி தாக்குதல்

# நால்வர் பலி; பலர் படுகாயம்

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த கமாண்டோக்கள் சென்ற கவசவாகனம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடியில் சிக்கியதால் அதிலிருந்த 4 கமாண்டோக்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 5 க்கு மேற்பட்டோர் படுகாயமுற்றனர்.**

நேற்றுக்காலை 7 மணியளவில் இக்கண்ணி வெடிச் சம்பவம் இடம்பெற்றதாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுக் காலை 7 மணியளவில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் இருந்த வாகனத்தொடரொன்றில் பல கொமாண்டோக்கள் கல்லடி நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்தனர் பொலிஸ் நிலையத்தில் இருந்து 300யார் தொலைவில் உள்ள அரசடி சந்திவழியாக ரோந்துப் படையினர் சென்றுகொண்டிருந்தபொழுது எமது வீரர்கள் தரைக் கண்ணி வெடியினை வெடிக்கச் செய்ததில் முன்னால் வந்து கொண்டிருந்த பொலிஸ் கவச வாகனம் கண்ணிவெடியில் சிக்குண்டு முற்றாக சிதைந்தது. அதில் வந்த 4 கொமாண்டோக்கள் ஸ்தலத்திலேயே பலியானதுடன் 5-க்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள். (மா)

## அரச அறிக்கை

கொழும்பு அக் 28

மட்டக்களப்புப் பகுதியில், அரசடியருகே நேற்றுக் காலை இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவமொன்றில் இரு பொலிஸார் இறந்துள்ளதாகவும் நாலுபேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அரசாங்கம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் பீரிஸ் (46 வயது) கான்ஸ்டபிள் ரத்நாயக்கா (26 வயது) ஆகிய இருவரும் இறந்துள்ளதாகவும், ஜெய

(9ம் பக்கம் பார்க்க).

முல்லை. மாவட்ட

## வனத்திணைக்களம் புலிகளின் கட்டுப்பாட்டில்

ஒட்டுசுட்டான், செவ்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சீர்குலைந்துள்ள வனத்திணைக்களத்தின் நிர்வாகம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

காடுகளை கண்டபடி அழிக்கக் கூடாதென்றும் முதிரை பாலை போன்றமரங்கள் வெட்டப்படக் கூடாதெனவும் விறகு, வீடுகட்டுவதற்கு தேவையான தடிவெட்டுவதற்கு பணம்கட்டி உத்தரவுப்பத்திரம் பெறவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

[ஓ]

ஸ்ரீலங்கா தபால் தலைகள்

## யாழ். தபாற்கந்தோர் முன்னால் எரிக்கப்பட்டன

### — ஈ பி ஆர். எல். எவ். தகவல்

யாழ்ப்பாணம், புதன்

யாழ் குடாநாட்டுத் தபால் பரிவர்த்தனையில் ஸ்ரீலங்கா தபால்தலைகள் ஒட்டப்பட்ட கடிதங்கள் இருந்தது தம்மால் கண்டுபிடிக்கப்பட்டு யாழ் பெரிய தபாற்கந்தோரின் முன் எரிக்கப்பட்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குடாநாட்டுத் தபால் சேவைப் பரிவர்த்தனையில் ஈழம் தபாற் தலைகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது இது ஈழம் தபாற் சேவைக்குக் கிடைத்த பெருவெற்றியாகும். இந்த வெற்றிக்குப் பொதுமக்கள், நிறுவனங்களின் ஒத்துழைப்புக் குறிப்பிடத்தக்க அளவில் இருந்திருக்கிறது.

இதேவேளை ஆனையிறவு தடைமுகாமுக்கு அப்பாலும், தீவுப் பகுதிகளில் நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு,

(9ம் பக்கம் பார்க்க)

புதுக்கடைத் திறப்பு விழா

## ஜெயச்சித்ரா ஜுவல்லறி

(வின்ஸர் திரை அரங்கு முன்பாக)

29-10-86 இன்று புதன்கிழமை

காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையுள்ள சுபவேளையில்

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 177/5, இலக்கத்தில் அமைந்துள்ள

புதிய ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கின்றோம்.

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும்

இவ்வைபவத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

ஜெயச்சித்ரா ஜுவல்லறி ஸ்தாபனத்தார்கள்.

(C-5462)

மத்திய, தமிழக அமைச்சரவை மாற்றத்தால்

## அரசின் சமரச யோசனைகளை எதிர்க்கும் சிங்களவர்கள் தீவிரமடைந்துள்ளனர்

### — ஹிந்து

சென்னை, அக் 28

இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு தமிழ்த் தீவிரவாதிகளின் கருத்தை அறியும் முயற்சிகளில் கடந்தவாரம் சென்னையிலும் புதுடில்லியிலும் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றங்கள் தாமதத்தை ஏற்படுத்திவிட்டது. இதனைப்பயன்படுத்தி இலங்கையில் இந்த யோசனைகளை எதிர்த்துவரும சிங்களவர்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினர் என சென்னை ஹிந்து' தெரிவித்துள்ளது.

ஹிந்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில் "இலங்கை அரசு இறுதியாக சமர்ப்பித்துள்ள யோசனைகள் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக அமையலாம் என இந்தியஅதிகாரிகள் கருதுவதனால் தீர்வு ஒன்றைக்காண கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை தமிழ்ப்போராளிகளும், கூட்டணியினரும் நழுவவிடக்கூடாது என அவர்கள் கருதுகின்றனர். இதனடிப்படையிலேயே முதலில் தமிழக அரசு மூலம் தமிழப் போராளிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

இதேவேளை சில தீவிரவாதக் குழுக்கள் தாம் ஒதுங்கியிருந்து கொண்டு புதிய

(9 ம பக்கம் பார்க்க)

மட்டு அரச ஆலைப்பகுதியில் படையினர்சுற்றிவளைப்பு

## நால்வருக்கு துப்பாக்கிச்சூடு; பதின்மூன்று பேர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகரிலுள்ள அரசாங்க அரிசி ஆலைச் சந்திப் பகுதியைச் சுற்றிவளைத்த பொலிஸ் கமாண்டோக்களும், ஊர்காவற் படையினரும் ஒரு முஸ்லிம் குடும்பம் உட்படப் 13 பேரைக் கைதுசெய்துள்ளனர். அதேசமயம் படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒரு முஸ்லிமும் 3 தமிழர்களும படுகாயமுற்றனர்

மரணமடைந்த மட்டக்களப்பு ஆயர் இல்லத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு ஒருவரின் பூதவுடல் மாதா கோவிலில்வைத்து ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஊர்காவற் படையினர் அக்கோவிலை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனால் அக்கோவிலில் ஆராதனை செய்யமுடியாதநிலை ஏற்பட்டது.

நேற்றுக் காலை இச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இங்கு நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் ஒரு வீடும், விறகு ஏற்றிவந்த ஒற்றை மாட்டு வண்டியும் பலத்த சேதமடைந்ததாகவும், மாடு ஸ்தலத்தில் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட வீட்டைச்சேர்ந்த இப்ராகிம் ஷிபாக் (வயது 40), இவரது மனைவி லத்தீபா, இவர்களின் 18 வயதுடைய மகள், பக்கத்துவீட்டுப் பணிப்

(9ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறக்குமதிசெய்யப்பட்ட வறுத்த சேமியா விற்பனைக்குண்டு. M. G. M., 777 K. K. S. Rod, Jaffna. T. P 22611. C-5070

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: விளம்பர இல. A 3015 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். A 3015

நல்ல நிலையிலுள்ள Honda (Varie) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: இல 4 (12) கோவில் வீதி (பிரதான வீதிக்கருகாமையில்), யாழ்ப்பாணம். (C 5465

தஃவீமுல் குர்ஆன் ஒரு ஜுஸ் ஐந்துஜுஸ் முப்பது ஜுஸ் குர்ஆன். இந்திய பத்தி திறம் அத்தர் வகைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிரபல புத்தக வியாபாரி. 11/1 ஏபிலேன், யாழ்ப்பாணம். (C 5470]

Broiler இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது; சிமாட்டி Fancy goods, 158 நவீன சந்தை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24413, 24096. சிமாட்டி பாம், ஸ்ரேசன் ரோட், மயிலன் காடு, சுன்னாகம். (C 5463]

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய் [C-5048]

## தேவை

சகல வசதிகளும் கூடிய அச்சகம் சமிஷன் அடிப்படையில் தேவை. தொடர்பு: விளம்பரஎண் C 5459, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 5459]

நன்கு அனுபவமுள்ள றைவர் தேவை. நற்பழக்கமுடையவராக இருக்க வேண்டும். முன்பு இண்டஸ்ரீஸ் ஸ்தாபனங்களில் கடமையாற்றியவர் விரும்பத்தக்கது. உங்கள் நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும். வரவேண்டிய நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 2 00 மணிக்கிடையில் வரவும். நேரில் வரவேண்டிய முகவரி:- றோயல் இண்டஸ்ரீஸ், பொன்னையா லேன், வண்ணார் பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை. (C 30.9)

### வகுப்புகள்

Radio and T V. Electronic Engineering வெல்டிங், வயறிங் மோட்டார் மெக்கானிசம், மோட்டார், வைண்டிங் தட்டெழுத்து - சுருக்கெழுத்து 2-11-86ல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. தொடர்பு: Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 5434

A/L 87 கலை, வர்த்தக, விஞ்ஞான முழுப்பாடத்திட்டத்திற்குரிய துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பம்: 1-11-86 தொடர்பு கொள்க: Shamrock Academy. No 247, Hospital. Rd. யுவானியார் ஆலய முன்பாக, யாழ்ப்பாணம். (C 5466]

### WANTED

Couple needs sharing accommodation in Catholic home or annex in Kondavil, Jaffna or suburbs Advt No C 5415, C/o Eelanadu, Jaffna. (C 5415]

## வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது அதற்கு அண்மையில் பஸ் போக்குவரத்து உள்ள பாதையில் அல்லது அண்மித்த பாதையில் பஹாய் சமய மாநில கந்தோருக்கு நீண்ட கால அடிப்படையில் ஒரு வீடு அல்லது பொருத்தமான பகுதி வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உடன் தேவை 31-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். பஹாய் சமய மாநில போதனைக்குழு, C/O திரு M. செல்வராசா, 5, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C-5454)

## சேவை

தரமான போட்டோஸ்ரற் பிரதிகள், தெளிவான 'றோனியோ' பிரதிகள் தமிழ்-ஆங்கில 'ரைப்பிங்' வேலைகளுக்கு; கிளிக்கட், 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22823. C 5422

### பயிற்சி

Radio, T. V. Repairing செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. காலம் 4 மாதம் Sat., Sun. பி. ப. 5-00—7-30. ஆரம்பம்: 1-11-86 அனுமதிகள் 15-11-86 வரை வழங்கப்படும். விபரங்கட்கு: Varuba Electrical, சிரணிச் சந்தி சண்டிலிப்பாய். (C-5461)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**பட்டப்பின் படிப்புகளுக்குப் பதிவுசெய்தல் 1986/87**

1986/87ஆம் ஆண்டுக்கு பட்டப்பின் படிப்பிற்கு பொருளியல், இந்துநாகரிகம், தமிழ், சமஸ்கிருதம், மெய்யியல், கல்வி ஆகிய துறைகளில் பதிவு செய்துகொள்ள விரும்பும் தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1986 நவம்பர் 27-ம் திகதி வரை விண்ணப்பங்கள், கலைப்பீடாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேற்கூறிய பட்டப்பின் படிப்புகளுக்குப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம், விபரணக்கொத்து என்பனவற்றை நவம்பர் முதலாந் திகதியிலிருந்து கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இவற்றை நேரடியாகப்பெற விரும்புவோர் யாழ். பல்கலைக் கழக நிதிக்கிளையில் ரூபா 25/- செலுத்திய பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்தும், தபாலில்பெற விரும்புவோர் நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெற்ற ரூபா 25/-இற்கான காசுக்கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 5/80 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டதுமான 38X25 ச. மீ. அளவுள்ள தபால் உறையை அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம். 27ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

பதிவாளர்.

(A-3024)



உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருஷம் ஐப்பசித் திங்கள் 17-ம் நாள் (03 - 11 - 1986) திங்கட்கிழமை பகல் 10-00 மணிக்கு மேல் வரும் சுப மங்கள நல் வேளையில்,

| எமது கனிஷ்ட புத்திரன் | எமது சிரேஷ்ட புத்திரி |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **திருச்செல்வராஜன்** | **கலாவதி** |
| (அரசினர் ஒப்பந்தகாரரும், சதாஸ் மோட்டோர்ஸ் யாழ்ப்பாணம், பங்காளரும்) | (யாழ் பல்கலைக்கழகம், கலைப்பீடம் 2-ம் வருடம்) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணை கொண்டு, நல்லூர், பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விருந்துபசாரம்:-

மணமகள் இல்லம் 3-11-86 திங்கள் பி. ப. 4 மணி
மணமகன் இல்லம் 4-11-86 செவ். பி. ப. 4 மணி

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| திரு திருமதி | திரு. திருமதி |
|---|---|
| செ. சதாசிவமும் | த. தியாகராசாவும் |
| (அரசினர் ஒப்பந்தகாரர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்) | (ஒப்பந்தகாரர்) |
| குடும்பத்தினரும் | குடும்பத்தினரும் |
| "சதாஸ்", | "தாயகம்", |
| 519/4, கஸ்தூரியார் வீது, | 2, தாயன்மார் வீதி, |
| யாழ்ப்பாணம். | நல்லூர்-யாழ்ப்பாணம். |

[C-5228]


## புதுமலர்



அம்மா என்று அழைக்கும் போது மெல்லினமும், அப்பா என அழைக்கும்போது வல்லினமும் இடையில் வருவது தமிழ் இலக்கணத்தின் சிறப்பியல்பு குளத்தில்மூழ்கிய தகப்பனைக் காணாது சம்பந்தர் அம்மையே அப்பா என அழுதார். இன்னுமம் அம்மையப்பன் என்றால் என்ன? உலகம் என்றால் என்ன? என்று கேட்டார் விநாயகப்பெருமான்.

இவ்வாறு தூய சொல்லாட்சி இருக்கும்போது வீட்டில் மாத்திரம் தகப்பனைப் 'பப்பா' என்றும் தாயை 'மம்மி' என்றும் பல குடும்பங்களில், செந்தமிழ் சிதறுண்டு கிடக்கின்றது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் தூய சொல்லாட்சியை மறக்கலாமா?

— பாணபத்திரன்

## பயிற்சி வகுப்பு

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிவகுப்பு சடந்தவாரம் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது. இறுதிநாளில் நிகழ்ந்த இறுதி நிகழ்ச்சிகளில் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் கலந்து சிறப்பித்தார்,

நூற்றிஐம்பதுக்கும் அதிகமான தொண்டர் ஆசிரியர்கள் இப் பயிற்சிவகுப்பில் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய கல்விப்பணிப்பாளர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பபாடசாலைகளில் ஆரம்ப பிரிவுக்கு மட்டும் நானூற்றி ஐம்பது ஆசிரியர்கள் பற்றாக் குறையிருப்பதாக கூறினார்.

பயிற்சிவகுப்பில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. [எ]

## சென் ஹென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். கல்வித் திணைக்களம் நடாத்தி வரும 13 வயதுக்குட்பட்ட உதைபந்து சுற்றுப் போட்டியில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியை 3-1 கோல் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற இவ்வாட்டம் ரசிகர்களுக்கு விருந்ததாக அமைந்திருந்தது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தல் நடைபெற்ற இப் போட்டிக்கு ரி. சிவகுமாரன் நடுவராகக் கடமையாற்றினர். [சி]


## சேவை நலன் பாராட்டு

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் உப அதிபர்

**திரு. எஸ். பஞ்சலிங்கம்**

அவர்களின் கல்விச் சேவையையும், 60-வது வயது நிறைவையும் பாராட்டும் வைபவம், சுண்டுக்குளி "பழைய பூங்கா சைனீஸ் விடுதி"யில் 09-11-1986 ஞாயிறு நண்பகல் 12-30 மணிக்கு நடைபெறும். இவ்வைபத்தில் பங்குகொள்ளும் நண்பர்கள். நலன் விரும்பிகள் 07-11-1986ந் திகதிக்கு முன் கீழ்வருவோருடன் தொடர்புகொள்ளவும்.

1. திரு. இ. கமலநாதன் சட்டத்தரணி, திருநெல்வேலி.
2. திரு. அ. யோ. பெனடிக்ற்பாலன் விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கல்லூரி.

[C-5447]



## விக்னு

டியூசன் சென்ரர்,
52. ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்.]

(மீட்டல் வகுப்புக்கள்)

A/L 87 **DAY CLASSES**

ஆரம்பம்: 03-11-86 காலை 8 மணி

Sat., Sun. CLASSES

ஆரம்பம்: 9-11-86 பகல் 12 மணி

முற்குறிப்பு:-

★ யாழ். நகரில் கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழு ஒன்றிணைந்து நடாத்தும் ஒரே நிறுவனம் இதுவாகும்.

★ கலை, வர்த்தக வகுப்புக்கள் இந்நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்றது.

[A-2826]

## ஜனாதிபதி சமோரா விமானவிபத்து:

# “விமானத்தில் பெரும் வெடிச்சத்தம் கேட்டது”

### உயிர் தப்பிய பயணிகள்

மபுட்டோ, அக் 29

“மொசாம்பிக் ஜனாதிபதி சமோரா மஷேலின் விமானம ஒரு பெரும் வெடிச்சத்தத்தையடுத்தே தரையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. அவ் வெடிச்சத்தம் பெரும்பாலும் ஒரு தாக்குதலாக இருக்கலாம்” என்று மொசாம்பிக் ஜனாதிபதி மஷேலின் விபத்துக்குள்ளான விமானத்திலிருந்து உயிர்தப்பிய பயணிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மஷேல் உட்பட 21 பேர இவ்விபத்தில் கொல்லப்பட்டிருந்தனர். இதே வேளை அவ்விமானத்தின் ஒரு விமானி உட்பட 10 பேர் உயிர் தப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

உயிர்தப்பிய விமானி அவ் விமானம் ஏவுகணை ஒன்றினால் சுடப்பட்டதாக தெரிவித்திருந்தார். தொடர்ந்து இத்தகவலை ஊர்ஜிதம் செய்வது போல அவ்விபத்தில் உயிர் தப்பிய பயணிகளும் தாம் விமானத்திலிருந்தபோது வெடிச்சத்தமொன்றைக் கேட்டதாகத் தெரிவித்துள்ளனர்

இப்பயணிகள் நேற்று பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பங்குபற்றினர். அப்போதே அவர்கள் மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; “விமானம் விபத்துக்குள்ளாகி தரையில் வீழ்ந்ததும் தென்னாபிரிக்கப் பொலிசார் உடனடியாக ஸ்தலத்துக்கு விரைந்தனர் ஆயினும் முதலுதவிகளை வழங்குவதற்குப் பதிலாக அங்கு சிதறிக்கிடந்த தஸ்தாவேஜுக்கள் பத்திரங்களை பரிசீலிப்பதிலேயே அவர்கள் அதிக அக்கறை காட்டினர்” என்றனர்.

---

## நாட்டும் மரத்தைப்பேணி பாதுகாக்க வேண்டும்

உடுவில், செவ்.

“வருடம் தோறும். நாடு பூராவிலும் உலக உணவு தினத்தை நினைவு கூர்ந்து மரங்கள் நட்டப்படுகின்றன ஆனால் அம்மரங்கள் பின்னர் பராமரிப்பின்மையால் அழிந்து போக அதே இடத்தில் அடுத்த வருடம் புது மரம் நாட்டப்படுகின்றது தொடர்ந்து புது மரங்களை நாட்டுவதை விட அவற்றை பேணிவளர்ப்பதே முக்கியம்”.

உடுவில் கமத தொழில் சேவை நிலைய பயிர்செய்கை உத்தியோகத்தர் திரு கே. சந்திரன் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் மாமரக்கன்றை நாட்டி வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

உலக உணவு தினத்தை முன்னிட்டு டயனுள்ள மரங்கள் நாட்டும் வைபவம் இங்கு நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு வை. யோகீஸ்வரனும் மாமரம் ஒன்றை நாட்டி வைத்தார்.

விவசாய பாட ஆசிரியர் திரு கே செல்வக்குமரன் பேசுகையில் உலக மக்களுக்கு பசி, பட்டினி, வறுமை ஆகியவற்றை போக்கி சத்துள்ள உணவை சமமாகவே பங்கிடும் நோக்காகவே இவ்வாரத்தில் பயனுள்ள மரங்கள் நாட்டப்படுகின்றன என்றார்.

விவசாய மன்றத்தின் ஆதரவில் விவசாய ஆசிரியரும் மாணவர்களும் இவ்வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தனர். ஆசிரியர் திரு.எஸ் தியாகராசா நன்றி கூறினார். (வா)

---

## வன்செயல்களினால்

# பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு

## நிவாரணம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை அரசு சார்பற்ற அகதிகள் புனர்வாழ்வு சங்கம் மேற்கொண்டுள்ளது.

யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியின் ‘இன்டறக்ட் சமூகம்’ மாணவர்களுக்குத் தேவையான கடந்த கால வினாத்தாள்களைக் கொடுத்துதவவுள்ளது

வன்செயல்களால் பாதிப்புக்குள்ளான பிள்ளைகள் கல்வி சம்பந்தப்பட்ட வகையில் உரிய நிவாரண உதவியைப் பெறக் கீழ்வரும் விபரங்களை அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

விண்ணப்பதாரர் பெயர், பெற்றோர்/பாதுகாவலர்) முகவரி. பிள்ளைகளின் விபரம். பிள்ளையின் பெயர், வயது ஆண்/பெண் படித்த பாடசாலை, வகுப்பு பாதிக்கப்பட்ட விதம், திகதி பெற்றோர் இருக்கிறார்களா? இல்லையாயின் விபரங்கள் தேவைப்படும் உதவி

பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் க. பொ. த [சா.த] படிப்பதாயின் கடந்த கால கேள்வித் தாள்கள் தேவைப்படின் பாடங்களின் விபரம்.

மேற்கண்ட விபரங்களை நவம்பர் 5ம் திகதிக்கு முன் திட்டமிடல் உதவிப் பணிப்பாளருக்கு தபாலுறையில் “பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கான நிவாரணம்” என்று எழுதி அனுப்புமாறும் கேட்கப்படுகின்றனர். விண்ணப்பங்கள் அவ்வப் பாடசாலை அதிபரினால் சான்று படுத்தி அனுப்பப்பட வேண்டும். (மா)

---

## “ஒடுக்கப்பட்ட மக்களின்

# நியாயமான போராட்டம் தோல்வி கண்டதில்லை”

பண்டத்தரிப்பு, செவ்.

“அடக்கு முறை எந்த வடிவத்தில் வெளிப்பட்ட போதிலும் அதற்கு எதிராகப்போராடுவதே எமது பணியாகும். தமிழ் மக்களுக்கு எதிராக இன்று அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் படுகொலைகளைக் கண்டிக்கும் அதே வேளை கடந்த கால வரலாற்று அனுபவங்களை கற்றுக் கொள்வது மிகஅவசியமாகும், ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயமான போராட்டங்கள் ஒரு போதும் தோல்வியைக் கண்டதில்லை”

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி[இடது]யின் பொதுக் கூட்டம் சாந்தையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் திரு கே. செந்தில்வேல் கூறினார்.

‘ஒடுக்கப்பட்ட மக்களின் ஒக்டோபர் 21 எழுச்சியின் 20 ஆவது ஆண்டு நிறைவும் இன ஒடுக்கு முறைக்கு எதிரான ஒருமைப்பாடும்’’ என்ற விடயம் பற்றி தலைமை வகித்து பேசுகையில் திரு கே.ஏ. சுப்பிரமணியம் குறிப்பிட்டதாவது:

சட்ட ரீதியிலான உரிமைகளை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மறுக்கப்படுவதை எதிர்த்துக் கடந்த 1966 ம்ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதயன்று எமது கட்சியினால் சுன்னாகத்திலிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று யாழ்நகர் நோக்கி நடத்தப்பட்டது ஊர்வலத்திற்குத் தலைமை வகித்த தோழர்களை பொலிஸார் தாக்கிஊர்வலத்தைத் தடுக்க முற்பட்ட போதிலும் மக்கள் தொடர்ந்து அஞ்சாது தமது ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினார்கள். இதுவே யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட முதலாவது சட்டவிரோத ஊர்வலமாகும். போராட்டத்திற்கான உணர்வுகளை வளர்த்தெடுக்க இது பெரிதும் பயன்பட்டது.

சட்டத்தரணி சோ தேவராசா உரையாற்றுகையில்: “இன்று கடல் வலயத்தடுப்புச் சட்டத்தினால் மீன் பிடித்தொழிலை மேற்கொண்டு வந்த ஏழை மக்களில பலர் பட்டினியால் வாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை அழிக்கும் வகையில் மீன்பிடித் தொழிலை கடலில் மேற்கொள்ளவிடாது பேரினவாத அரசு தடை செய்துள்ளது ஆகவே எமது மக்களின் அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் பேரினவாத ஒடுக்கு முறை தகர்க்கப் படுவதோடு சாதியின் பேரினால் ஏற்படுத்தப்படும் அடக்கு முறைகளும் சமூகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்’’ என்றார்.

பெண்கள் உட்படப் பெருந்தொகையானோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (சி)

---

## புதுவித மண்வெட்டிகள்

நெல்லியடி, செவ்

புலோலி, அம்பன் கமநல சேவைநிலையங்களுக்கு 2கிலோ எடையுள்ள புதுவித மண்வெட்டிகள் இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்படவுள்ளன.

இவற்றைப்பெற விரும்பும் விவசாயிகள் மேற்படி நிலயங்களுடன் தொடர்பு கொண்டு முற்பணமாக ரூபா 100/- செலுத்தி தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கமநல சேவைப் பகுதியினர் சகல பகுதி மக்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளனர். (ரா)

---

## பிரார்த்தனை

(நெல்லியடி)

பருத்தித்துறை, உடுப்பிட்டி, கரவெட்டி, நெல்லியடி ஆகிய பகுதிகளில் றோமன் கத்தோலிக்க பக்தர்கள், ஒவ்வொரு கத்தோலிக்க வீடுகளுக்கும் சென்று சுமார் அரை மணி நேரம் செபமாலைப் பிரார்த்தனைகளைச் செய்து வருகிறார்கள்.

நாட்டில் அமைதி, ஒற்றுமை நல்வாழ்வு ஆகியவற்றுக்காக தெய்வீக சக்திகளை வேண்டுவதே இதன் நோக்கமாகும்.

---

## உலக்கை அடிக்கு

# பலியானவரின் மரணம் ‘கொலை’ எனத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்.

உலக்கையடிக்கு பலியான இளைஞரின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மாதகலைச் சேர்ந்த அ. ஆனந்தராசா (26 வயது வின் மரண விசாரணை முடிவில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

யாழ் பதில் நீதவான் எ. அன்ரனி மரண விசாரணை நடத்தினார்.

மாதகல்துறையில் இறந்தவருக்கும் மற்றொருவருக்கும் ஏற்பட்ட வாக்கு வாதத்தின் பின் வீடு சென்ற போது இறந்தவர் உலக்கையால் தாக்கப்பட்டு தனியார் ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்லப்பட்டபின் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்கையில் மரணமானார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்களான நால்வரை, கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட பதில் நீதவான் கொலை எனத் தீர்ப்பளித்தார். (இ)

---

## பேரனுடன் சைக்கிலில் சென்ற

# ஆறுவயதுச் சிறுவன் மினிபஸ் மோதி மரணம்

யாழ்ப்பாணம், புதன்

மழைநேரத்தில் பேரனுடன் சைக்கிளில் வீடு நோக்கிவந்த ஏழு வயதுச் சிறுவன் மினி பஸ்ஸிற்கு பலியானார். மினி பஸ்சாரதி 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், மினி பஸ்ஸை இன்று காலை யாழ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

ஓட்டுமடத்தைச் சேர்ந்த யாழ். இந்துக்கல்லூரி மாணவன் பி. கோகிலராசாவின் [6 வயது] மரணவிசாரணையில் இத்தகவல் தெரியவந்தது.

யாழ். பதில் நீதவான் ஏ அன்ரனி நேற்று மரண விசாரணை நடத்தினார்

இச்சிறுவன் கடந்த வெள்ளி திருநெல்வேலியிலுள்ள தனது பேரன் வீட்டிற்குச் சென்றுவிட்டு, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பேரனுடன் சைக்கிளில் வீடுநோக்கி வந்த போது ஆலடிச் சந்தியில் இச்சம்பவம் நடந்ததாக விசாரணையில் கூறப்பட்டது.

பலத்தமழை காரணமாக வீதியருகில் உள்ள கிடங்கில் சைக்கிள் விழுந்தபோது பின்னால் வந்த மினிபஸ் சிறுவன் தலைமீது ஏறிச்சென்றதாகவும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதித்தபோது சிறுவன் மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மினி பஸ்ஸில் இலக்கத்தகடு இருக்கவில்லையென்றும், விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதவான் சாரதியை நவம்பர் 5ம் திகதி யாழ் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். (இ)

---

## அபிவிருத்தி குறித்து மகஜர்

(மண்டை தீவு)

கொழும்புத்துறை கிழக்குப் பகுதி மக்களின் தொழிற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பான மகஜர்ஒன்றை கொழும்புத்துறை கிராமிய கடற்றொழில் அபிவிருத்தி அமைப்பு என்ற ஸ்தாபனம் இந்த அமைப்புத் தொடர்பான மாவட்ட ஒன்றியத்துக்கு அனுப்பிவைத்துள்ளது.

கொழும்புத்துறை கிழக்கு மக்களின் பிரதேச உற்பத்தி கடற்றொழில் தொடர்பான தேவைகள், முன்னேற்றங்கள் கடற்றொழிலாளர் பிரச்சனைகள், இக்கிராமத்தின் துப்புத் தொழில், கிடுகு பின்னல் தொழில் விஸ்தரிப்புப் பற்றியும் கடற்றொழில் பாதுகாப்பு அபிவிருத்தி பற்றியும் அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (வா)

---

## இன்று ஒலி, ஒளி ஒன்றியத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

ஒலி, ஒளி ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று புதன் கிழமை காலை நடைபெறவுள்ளது.

மாணவர் தொடர்பகத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சகல தொலைக்காட்சி சேவை உரிமையாளர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை நவம்பர் முதலாம் தேதிக்கு பின் அனுமதி பெறாத சேவைகள் அனைத்தும் தம்மால் தடை செய்யப்படும் என்றும் மேற்படி ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ரா)

### மணிவாக்கு

தியானம் என்பது ஆன்மாவின கண்ணுடி; அதன் வழியே மனிதன் இறைவனைத் தன்னருகில் காண்கிருன்.

—ல, வன்டைன்

## நமது நோக்கு

# பூஸா கைதிகள் பற்றிய விசாரணைகள்

பூஸா தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

அரசாங்கம் எடுக்கும் இப்படியான முடிவுகள் பற்றி பத்திரிகைகளில் அடிக்கடி பார்க்கின்ருேம். செயலளவில் அவை சாத்தியமாவது பெருங் காரியமே.

பூஸாவிலும் வெலிக்கடையிலும் போகம்பரையிலும் வேறு பல ராணுவ முகாம்களிலும் தமிழ் இளைஞர்கள் நூற்றுக்கணக்கில் விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் பற்றி சொல்லி மாளாது. கொடுமைதாங்காத நிலையில் அண்மையில் பூஸாவிலும் வெலிக்கடையிலும் தமிழ் இளைஞர்கள் சாகும்வரை உண்ணுவிரதம் அனுஷ்டித்ததும், பல இளைஞர்கள் உயிர் துறக்கும் அபாய நிலையை அடைந்திருந்ததும் தெரிந்த விடயம்.

சிறைவைக்கப்பட்டுள்ள இந்த இளைஞர்கள் உண்மையாகவே குற்றமிழைத்திருப்பாரானுல் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படியும் குற்றம் இழைக்காதவர்களை விடுவிக்கும்படியும் அவர்கள் சார்பில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன

இவர்களில் எத்தனை பேர் தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்பதோ எத்தனை பேர் வெறும் சந்தேகத்தின் மீது கைதானவர்களென்பதோ இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. உண்மையில் சொல்லப்போனுல், தமிழ் இளைஞர்கள் எனறவகையில் கண்டவர் நின்றவர்களையெல்லாம் அரசபடைகள் பிடித்துக்கொண்டுபோய் அடைத்து வைத்திருக்கிருர்கள் என்றே கருதவேண்டியிருக்கிறது இல்லையெனில் இவர்கள் மீதான விசாரணைகளை உடனுக்குடன் முடித்து நடவடிக்கை எடுக்காமல் இருப்பதின் மர்மம் என்ன? கூடியவரை ஏதாகிலும் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி அதன்மீது வாக்குமூலங்களைபெற்று, நீதிமன்றங்கள் மூலம் தண்டனை கொடுப்பதற்கு முயற்சிகள் நடப்பதாகவே சந்தேகம்கொள்ளத்தோன்றுகின்றது.

நிர்ப்பந்தத்தின் மூலம் எடுக்கப்படும் வாக்குமூலங்களே இந்த நாட்டில் தமிழ் இளைஞர்களைத் தண்டனைக்குரியவர்களாக ஆக்கிவிடுகின்றன அந்த வகையிலேயே சட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டக்கொடுமைகளால்தான்பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் தீவிரவாதிகளாக மாறினர்கள் என்பதை அரசுத் தலைவர்கள் இன்னும் உணராமல் இருக்கிருர்கள்

தமிழ் பத்திரிகைகளைத் தவிர, சிங்கள, ஆங்கில ஏடுகளோ, வானொலி, தொலைக்காட்சி சாதனங்களோ இந்த இளைஞர்களின் விடுதலைக்காக குரல் எழுப்புவதில்லை. தமிழ் பெற்ருேரும், தமிழ்ப் பகுதிகளில் உள்ள பிரஜைகள் குழுக்களும், சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற ஸ்தாபனங்களும் அடிக்கடி எழுப்பிவரும் முறையீடுகளின் பிரதிபலிப்பாக இப்பொழுது பூஸா இளைஞர்கள் பற்றிய விசாரணைகள் துரிதப்படுத்தப்படுவதாக செய்திவந்திருக்கின்றது

இதுவெறும் செய்தியாகவே இருந்துவிடக்கூடாது என்பதேஎமதுகவலை பூஸாவில் மீண்டும் இளைஞர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் இறங்கும் நிலை ஏற்படாதவகையில் விசாரணைகள் விரைந்து நடத்தப்படவேண்டும் குற்றம் புரிந்திருக்கக்கூடியவர்கள் நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்பட்டு விசாரணைகள் நடத்தப்படவேண்டும். ஏனையோர் நிபந்தனைகள் எதுவும் இன்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

---

பணம் பொருள்

## அபிவிருத்திக்கழகம் உதவியளிக்கும்

உடுவில், செவ்

"இந்த பயிற்சியை மேற்கொள்ளும் யுவதிகளினுல் தயாரிக்கப்படும் பொருட்களை உடுவில் வை எம். சீ ஏயினர் சந்தைப்படுத்துவதற்கு எமது பணம் பொருள் அபிவிருத்திக்கழகம் உதவியளிக்கும்."

உடுவில் வை. எம். சீ ஏ. மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய பணம் பொருள் அபிவிருத்திச் சபை விற்பனை அதிகாரி திரு. எம் திவ்வியராசா இவ்வாறு கூறினுர்.

இக்கருத்தரங்கிற்கு திரு. பிரின்ஸ் இரட்ணம் தலைமை வகித்தார் அவர் தமது தலைமையுரையில் யுவதிகள் தம் சொந்த தேவைகளை நிறைவேற்றிக்கொள் பிறரை எதிர்பாராமல் சுய முயற்சிகள் மூலம் பூர்த்தி செய்ய வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று கூறினுர்.

உடுவில் வை. எம். சீ ஏ. செயலாளர் திரு. எஸ். சுரேஸ் நன்றி கூறினுர்

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், புதன்

சுன்னுகம் இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று கல்லூரியின் புதிய மண்டபத்தில் நடைபெறுகின்றது.

யாழ் பல்கலைக் கழக பதிவாளர் திரு. ந சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் திருமதி சிவராசா பரிசில்களை வழங்குவார்.

---

உலக அரசியல் — அவதானி

# அனைத்துலகும் மதிப்பளிக்கும் நோபல் பரிசு

**நோபல் பரிசு தொடர்பான நூதன அனுபவங்கள் பல.**

**நைஜீரியாவிலுள்ள நண்பர்கள் அங்குள்ள பியர்க்கடைகளைக் காலியாக்கியிருப்பார்கள் என்கிருர் இலக்கியப் பரிசு பெற்ற முதலாவது நோபல் பரிசு பெறும் ஆபிரிக்க எழுத்தாளர் சோயின்கா**

**பரிசுக் குழுவின் பாரிய பொறுப்பு கண்டனத்துக்கப்பாற்பட்டதல்ல**

### வரலாறு

இந்தப் பரிசுக்குஏற்பாடு செய்தவர் டைனமைட் கண்டுபிடித்த சுவீடிஷ் பெருமகன் நோபில் என்பவர். அதன் வாயிலாக ஏராளமான வருவாய் கிடைத்துக் கோடீசுவரரானுர். அவர் சொந்து முழுவதையும் சுவீடிஷ் சழகத்திடம் ஒப்படைத்தார். அந்த டிரஸ்ட் இலக்கியம், பௌதிகம் இரசாயனம், தாவரவியல் மருத்துவம்,பொருளியல் உலக சமாதானம் ஆகியவற்றில் தலைசிறந்தோருக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கி வருகிறது. பரிசின் இன்றைய தொகை 80 லட்சம் ரூபாயாக மதிக்கப்படுகிறது.

### இலக்கியப் பரிசு

இவ்வருட - இலக்கியப் பரிசு முதன்முதல் நோபில் பரிசு பெறும் ஆபிரிக்காவின் எழுத்தாளர் நைஜீரிய நாட்டு வோல் சோயின் என்பவர்.

இலக்கியப் பரிசு என்பதும், ஆசியாவில் முதல் நோபில் பரிசு பெற்ற இந்திய மகாகவி ரவிந்திரநாத்தாகூரின் நினைவு வருகிறது. 1913-ல் அப்பரிசு ரவீந்திரருக்கு வழங்கக்காலாயிருந்தது அவருடைய 'கீதாஞ்சலி' - பாடலால் இறைவணக்கம் செய்வதே 'கீதாஞ்சலி'. தமது தாய் மொழியாகிய வங்க மொழியில் எழுதப்பட்ட பாடல்கள் ஆங்கில மொழிபெயர்ப்பில் சமர்ப்பிக்கப்படடன. 'மொழி பெயர்ப்பில் நெஞ்சைஅள்ளும் தன்மையிலவென்ருல் தாய் மொழியில் எவ்வாறிருக்கும்? என்ற அதிசயத்தை பரிசுக்குழு வியந்து கூறியதாம்.

### ஆபிரிக்க இலக்கிய மரபு

இன்று இலக்கியப் பரிசு பெற்ற ஆபிரிக்க எழுத்தாளர் ஆங்கிலத்திலே பெரும்பாலும் எழுதுபவர். பாரிஸில் இருந்த போதே இந்த நற்செய்தி அறிந்தார். 'இது எனக்கு அளிக்கப்பட்ட தனிக்கௌரவம் அல்ல, எங்கள் நாட்டின் இலக்கிய மரபுக்குக் கிடைத்த மதிப்பு' என்று குறிப்பிட்டார்' நன் ராணுவ ஆடசியை எதிர்க்கும்போவழி எங்கள் ஆட்சிக்கெதிராகப் பேசியும் எழுதியும் வருபவன். ஆனுல எதுவிததத்திலும் பெருமையடைடவன் அலல என்றும் எழுதிக்கொண்டும் சிந்தித்துக்கொண்டும் இருப்பவன்; ஆங்கிலமே சுதந்திர நைஜீரியாவின் பொதுமொழியாக விருப்பது விசித்திரமாகும். இருப்பினும் அதிலே எழுதும் திறமையை பயிற்சி செய்து வந்ததாலும் ஆபிரிக்கமக்களின அபிலாஷைகளை பாட்டிலும் நாவலிலும், பிரதானமாக நாடகததிலும் அடிப்படையாகக்கொண்டு எழுதுவதில்அனுபவம் பெற்று வருகின்றேன எனது சொந்த மொழியிலும் எழுதிவருகிறேன்.

பரிசு கிடைத்தது எனது பழக்கத்துக்காலுலும் தனிப்பட்ட முறையிலும இது பெருமகிழ்ச்சியும் பெருமையுமென்பதை நான் எவ்வாறு மறைப்பது? உண்மையில் பரவசப்படுகிறேன" என்ருர்.

### தாய்மொழிக் கல்வி

தாய்மொழி விருத்தியடைந்த அல்லது விருத்தயடைய அம்மொழியிலேயே படிக்க எழுதவேண்டிய அவசியம் தாகூர் போன்ற உலக கல்விமான்களால் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

"ஆங்கிலத்தில் படிக்கும் உங்களுக்கு இந்த மிகவுயர்வான தீவைப்பற்றிப பாடும் புலமை எவ்வாறு கிடைக்கும்?" 1934ல் யாழ்ப்பாணம் வந்த உலக மகாகவி இவ்வாறு கூறியது இன்றும் சிந்தனைக்குரியதாகின்றது.

நோபல் பரிசுப்பணம் முழுவதையும் சாந்திநிகேதன் என்ற தாகூர் ஸ்தாபித்த சர்வதேச பல்கலைக்கழகத்துக்கு அர்ப்பணித்தார்.

### போய்வாருங்கள்

நோபல் பரிசு கிடைத்த பின்னரே மகாகவியின் பெருமையை அறிந்த இந்தியப் பெரியோரும் பல்கலைக் கழகங்களும் அவரை கௌரவிக்க முடன்றனர். ஆயிரக் கணக்கில் அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்க வந்த விருந்தினரை "இப்போது தான் கண்விழித்தீர்களா போய் வாருங்கள் என்று சினந்து கலைத்து விட்டார்.

### சோயின்கா

இன்னெரு இலக்கியப் பரிசு எழுப்பிய கேள்விகள் இரண்டு. இலக்கியத்தில் இவரிலும் மிக பெரிய திறமை பெற்றவர் இருந்தபோதும், ஆபிரிக்க நாட்டை இனியாவது கௌரவிக்க வேண்டுமென்ற காரணத்தால் நைஜீரிய நாட்டவர்க்கு இது அளிக்கப்பட்டதா? அப்படியல்லவென்பதே இந்த ஆட்சேபத்திற்கு கிடைத்திருக்கும் உலகளாவிய விடை.

சோயின்கியின் தேசியத்தின் தீவிரம் ஏனைய தீவிர ஆபிரிக்க எழுத்தாளர்களுக்கு ஊக்கம் ஊட்டுமா? என்ற வினவிற்கு அவர் அளித்த விடை ஆபிரிக்க இலக்கியம் என்ற பெரும்மரபு உண்டு. இன்றைய தீவிரவாத எழுத்தாளர்கள அனைவரும் சிறையில் வாடுகின்றனர். எனவே ஆங்கிலத்தில் எழுதப்பட்ட என்னுடைய நூல்களவர்களின் சுயமொழி ஆக்கங்களை எவ்வாறு தூண்டும்?

52 வயதுடைய ஆபிரிக்க எழுத்தாளர் மகாகவி தாகூரைப்போல் உலகப் பிரசித்தி பெற்றவரல்ல ஆனுல் பரிசு கிடைத்தது தம்மை உணர்ச்சி வசப்படடிருக்கிறது. பாரிஸில் நின்று நான் என் சொல்ல வேண்டும். சர்வதேச நாடகக் குழுவிற்கு தலைவரான இவர், வீடு திரும்பி தாம் இந்தப் பரிசை எவ்வாறு பயன்படுத்தலாமெனக் கூறினுர். நாடகக்கலையை இவறு அவருடைய பெருபணியாக இருக்கிறது.

(தொடரும)

---

## மக்கள் கருத்து

### தமிழர் கல்வியும் அரசினர் பாடநூல்களும்

கடந்த 26ம்திகதி 'ஈழநாடு' ஆசிரிய தலையங்கத்தில் வரவேற்கத்தக்க நல்ல கருத்துக்களை வெளியிட்டிருக்கிறீர்கள் நான்குறிப்பிடுவது 'இன்றுசாத்தியமா?' என்பதும் '5ம வகுப்புக்கான தமிழ் பாடப் புத்தகம்' என்பதையும்தான்.

கடந்தசில வருடங்களாக அரசினர் பாடப் புத்தகங்களை வெளியிட ஆரப்பித்த நோக்கம் இன்று வெட்டவெளிச்சமாகிவிட்டது எமது வருங்கால மாணவர்களின் தாய் மொழி அறிவை மழுங்கடிக்கச் செய்த எமது சிருர்களின்கல்வி வளர்ச்சியைக் குன்றச்செய்து பின்னடையச் செய்வதே அரசின் நோக்கமென்பது வெள்ளிடை மலை.

நமது சிருர்கள் படிக்கும் நூல்களை வேருெரு மொழி பேசும் கல்விமான்களால் உருவாக்கப்படவேண்டியதில்லை எமதுபாட நூல்கள் எம்மத்தியிலுள்ள தமிழ்ப்பேசும் கல்விமான்களால் எழுதப்படல் வேண்டும் எமது தய்மொழியிலுள்ள நீதி நூல்கள், அறிவுக்களஞ்சியங்கள், விஞ்ஞன பொறியியல், தொழில்நுட்ப நூல்கள் எமது மக்களால எழுதப்படல் வேண்டும். அப்படியானுல்தான் தாய்மொழிப் பற்றும் மேற்குறிப்பிட்ட பல்துறை அறிவும் வளருவதற்கு வாய்ப்புண்டாகும்.

வெ. சு. நடராசா,
(அராலி)

---

## ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், புதன்

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் விக்கிரகங்கள் தகர்க்கப்பட்டு தங்க நகை உட்பட பல பொருட்கள் களவாடப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றது

இச் சம்பவத்தை அடுத்து பிராயச்சித்த அபிஷேகம் செய்யப்பட்டு மீண்டும் இவ் ஆலயத்தில் நித்திய காலப் பூஜைகள் வழமைபோல் நடைபெறுகின்றது. (ஈ)

# "கலை, கலாசாரம் தொடர்ந்து பேணப்படவேண்டும்"

மானிப்பாய், செவ்.

"பல வித கஷ்டங்களுக்கு மத்தியிலும் நமது கல்வி, இசை, கலை, கலாசாரம் தொடர்ந்து பேணப்பட்டு வளர்ச்சிபெற வேண்டுமென்ற உன் நோக்கத்துடனேயே மாணவர்களுக்குஇடையிலான போட்டிகள் நடாத்தப்படுகின்றன அத்தோடு அவர்கள் தத்தமது அரிய திறமைகளை வெளிக்காட்டவும் இவை சந்தர்ப்பம் அளிப்பதாகவும் அமைகிறது".

இவ்வாறு யாழ் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இசை, நடன நாடக போட்டிகளின் இறுதி நிகழ்ச்சிகளின்போது பிரதம விருந்தினராக் கலந்து உரையாற்றுகையில் கூறினார்.

திரு சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில்:- "நமது கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாத்து வளர்ப்பது எதிர்கால சந்ததியினரின் மகத்தான பொறுப்பாக இருக்கின்றது. விரிவான மன வளர்ச்சிக்கும் மன அமைதிக்கும் கலை உதவுகின்றது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று இவ்வித விஷயங்களுக்கு கல்வித் திணைக்களத்தின் ஊக்கம், ஆதரவு என்றும் இருக்கும். கல்வி, கலாசார வளர்ச்சி கல்விக்கந்தோருடனும் ஆசிரியருடனும் மட்டும் நின்றுவிடாது பெற்றோரும் மற்றோரும் உதவி ஊக்கமளிக்க வேண்டும்'- என்றார்.

இரு தினங்களாக நடைபெற்ற இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளை அடுத்தமாதம் 15ம் திகதிக்கு முன் தொலைக்காட்சிப் படமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கல்விப்பணிப்பாளர் இது சகல மாணவர்களும் இதனைப் பார்க்க சந்தர்ப்பம் வழங்குவதாக இருக்கும் என்றும் கூறினார்.

இந்நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்திருந்த சகலரையும் தாம் வெகுவாகப் பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்டபாடசாலைகள் பங்குபற்றின. [எ]

## அலுவலகம் இடமாற்றம்

பருத்தித்துறை செவ்.

நெல்லியடி - யாழ்ப்பாணப் பிரதான வீதியில் உள்ள கட்டிடமொன்றில் இதுவரை இயங்கி வந்த கட்டைவேலி உடுப்பிட்டி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க தலைமைக் காரியாலயம் நெல்லியடி-கொடிகாமம் வீதியில் உள்ள வெற்றிவேல் கட்டிடத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாக சங்கப் பொதுமுகாமையாளர் திரு. எஸ் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஒ)

## அரிசி விலை அதிகரிப்பு

பண்டத்தரிப்பு செவ்

யாழ் மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் அடைமழையை அடுத்து நாட்டரிசியின் விலை அதிகரித்துள்ளது பண்டத்தரிப்பு சந்தையில் 8 ரூபா 50 சதமாக விற்கப்பட்ட ஒரு கிலோ நாட்டு அரிசி தற்போது 9 ரூபாவாக அதிகரித்துள்ளது 9 ரூபாவாக விற்கப்பட்ட நல்ல ரக நாட்டரிசி பத்து ரூபாவாக உயர்ந்து விட்டது.

# மானிப்பாய் கல்வி வட்டார தமிழ்தின போட்டி முடிவு

உடுவில் செவ்

மானிப்பாய் கல்வி வட்டார பாடசாலைகளுக் கிடையிலான தமிழ் தினப்போட்டிகள் உடுவில் இராமநாதன் கல்லூரியில் வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெற்றன போட்டிகளில் முதலிடம் பெற்றோர் விபரம் வருமாறு;

ஆண்டு 4 5 வாசிப்பு வி. கோசலி உடுவில் மகளிர் கல்லூரி, ஆக்கம் செ. மஞ்சுளா ஏழாலை சைவமகாஜன பாஓதல் இ. ஐறின் ஏழாலை சென் இசிதோர், எழுத்து பிரியதர்சினி - உடுவில் மகளிர் கல்லூரி

ஆண்டு 6.7 வாசிப்பு இ. சுபாஜினி நவாலி அட்டகிரி சைவவித்தியாசாலை, ஆக்கம் ந. றெஜிதா சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம் பாஓதல் இ. சஜீவி நவாலி மகாவித்தியாலயம், எழுத்து ந. ரமணன் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

ஆண்டு 8-9 கட்டுரை சி. சாந்திகுமார் சுதுமலை சிம்மய பாரதி வித்தியாசாலை, ஆக்கம் ஏ.சுபத்திரா ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை, பேச்சு செ. வனஜா உடுவில் மகளிர் கல்லூரி பாஓதல் வி. அபிராமசுந்தரி இராமநாதன் கல்லூரி.

ஆண்டு 10-11 கட்டுரை ச. சசிக்குமார் மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஆக்கம் சி. விஸ்ரவசு தாவடி இந்து த. க. பாடசாலை பாஓதல் க. மதிவண்ணன் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாசாலை, பேச்சு செ. கிருசாந்தி உடுவில்மகளிர் கல்லூரி, சமூக நாடகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை, சிறுகதை போட்டி அ. அனுஷியா உடுவில் மகளிர் கல்லூரி.

## நியமனம்

பண்டத்தரிப்புசெவ்

காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளராக திரு. நா. போஜன் நியமனம் பெற்றுள்ளார். கொழும்பிலுள்ள இலங்கை சாரணர் சங்க பிரதம ஆணையாளர் இதற்கான நியமனக்கடிதத்தை வழங்கியுள்ளார்.

## தமிழ்நாடு லயன்ஸ் ஆளுநர்கள்

பண்டைதீவு, செவ்.

இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ள தமிழ்நாடு லயன்ஸ் ஆளுநர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் வருகை மூலம் இப்பகுதி அகதிகளுக்கு பல உதவிகளைச் செய்யக்கூடியதாக அமையும் என்றும் கோப்பாய் லயன்ஸ் பொதுசன தொடர்பு பிரதிநிதி தெரிவித்துள்ளார். [சி]

## பதவி உயர்வு

கண்டிக்குளி, செவ்.

மானிப்பாய் புனித அன்னம்மாள் பாடசாலையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. ஏபிரகாம் பதுவைநாயகம் இம் மாதத்திலிருந்து சுன்னாகம் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதுடன் அப்பாடசாலையின் உதவி ஆசிரியராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மானிப்பாய் புனித அன்னம்மாள் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் பல வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஊ]

## சைக்கிள் திருட்டு

பண்டத்தரிப்பு செவ்

பேக்கரிக்கு பாண் வாங்க வந்த இளைஞர் ஒருவரின் சைக்கிள் திருடப்பட்ட சம்பவம் பண்டத்திரிப்பில் நிகழ்ந்தது.

பண்டத்தரிப்பிலுள்ள பேக்கரி ஒன்றின் முன்னால் தமது 2000 ரூபா பெறுமதியான சைக்கிளை நிறுத்திவிட்டு பாண் வாங்கிக்கொண்டு திரும்பி வந்தபோது தமது சைக்கிள் திருடப்பட்டது கண்டு அவர் அதிர்ச்சிடைந்தார்.

இதேவேளை பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது

## பெண் பிரயாணிகள் அச்சம்

கிளிநொச்சி, செவ்வாய்.

ஆனையிறவு இராணுவ முகாமில் பிரயாணிகள் சோதனையின் போது இளம் பெண் பிரயாணிகளுக்கு இராணுவத்தினர் தமது விலாசங்களை கொடுத்து தமக்கு கடிதம் எழுதுமாறு கேட்கின்றனராம்.

இதனால் தினமும் இராணுவ முகாம் ஊடாக பிரயாணம் செய்யும் பெண்கள் பெரும் அச்சம் கொண்டுள்ளனர்.

## நாவாந்துறை வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 13-வயதுக்குட்பட்டோர் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி ஒஸ்மானியாக் கல்லூரியை 4—0 கோல்களால் வெற்றி பெற்றது.

ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு டீ. ஏ. எம். குணசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார் [வி]

## சேவைக்காலம் நீடிப்பு

ஒட்டுசுட்டான், செவ்.

முத்தையன் குளக்கட்டு திட்ட முகாமையாளராக கடமையாற்றிவரும் பொறியியலாளர் திரு. இ. அருமைநாயகத்தின் சேவைக்காலத்தை மீண்டும் ஒருவருட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக காணிகள், காணி அபிவிருத்தி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# "தேவைகளையறிந்து செயலாற்றுவது லயன்ஸ் கழக குறிக்கோள்"

மாவிட்டபுரம், செவ்.

"லயன்ஸ் கழகம் செல்வந்த மக்களுக்காகவும் வசதிகூடியவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டதென்றும், அவர்களது நலனுக்காகவும், உல்லாசப் பொழுதுபோக்குக்காகவும் செயல்படுகிறதென்றும் அபிப்பிராயம் நிலவுவது தவறானது. மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றிவைப்பதே லயன்ஸ் கழகங்களின் குறிக்கோள் என்பதை சகலரும் உணரவேண்டும்".

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ்கழக புதிய அங்கத்தவர்களின் சத்தியப்பிரமாண வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துரையாற்றிய மாவட்ட லயன்ஸ் உதவி தலைவர் டாக்டர் ரி. பகீரதன் கூறினார்.

காங்கேசன்துறை சிமெந்து ஆலை உத்தியோகத்தர் விடுதியில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் புதிய அங்கத்தவர்களான லயன் வே. குமாரசுந்தரம், லயன் மா. பொன்னம்பலம் லயன் க. தர்மகுலசிங்கம், லயன் க. அருந்தவராசா, லயன் நி. மரியநாயகம், லயன் சா. ஸ்ரீபதி, லயன் ஏ சண்முகநாதன் ஆகியோர் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

டாக்டர் ரி. பகீரதன் மேலும் பேசுகையில் 'வசதி குறைந்த மக்கள் தமது பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளமுடியாமல் அல்லல்படுகின்றனர். எல்லாவற்றையும் பணம்செலுத்திசெய்ய அவர்களது வருமானம் போதுமானதாக இல்லை இந்நிலையில் அவர்களுக்கு இலவசமாக பல்வேறு பணிகளைச் செய்ய லயன்ஸ் முகங்கள் முன்வர வேண்டும்" என்றார்.

"லயன்ஸ் கழகம் 1917ம் ஆண்டு ஜூன் 7ம் திகதி மெல்வின்யோன் என்னும் அமெரிக்கரால் ஆரம்பிக்கப்பட்டு இன்று 150 நாடுகளில் 13 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டு சிறந்தபணியாற்றுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாவை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. பி. ஜே. அந்தோனிப்பிள்ளை இவ்வைபவத்திற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் இப்பகுதி மக்களுக்கு தமது கழகம் முடிந்த அளவில் சேவையாற்றி வருவதாகவும், இன்று சத்தியப்பிரயாணம் எடுக்கும் அங்கத்தவர்கள் அதற்கு முன்னரே தமது பணிகளை சிறப்பாக ஆற்றத் தொடங்கி விட்டனரென்றும் குறிப்பிட்டார்.

மாவை லயன்ஸ் கழக செயலாளர், லயன் ராஜு என். வீரசிங்கம் சத்தியப்பிரமாண வைபவத்திற்கு பொறுப்பாக இருந்தார்.

லயன் ஏ. வி. சர்மா நன்றி கூறினார் [வா]

## மக்களின் அன்பை பெற்றவர்

சாவகச்சேரி, செவ்.

"இப்பகுதியில் 18 வருடங்களாகச் சேவை செய்து தெல்லிப்பளை சுகாதாரப்பகுதிக்கு பதவியுயர்வுடன் மாற்றலாகிச் செல்லும் செல்வி சி. யோகவதியின் சேவையுணர்வு கடமையுணர்வு. பொறுப்புணர்வு நாம் பல காலகட்டங்களில் அவதானித்துள்ளோம் அவர் மீது மக்கள் கொண்டுள்ள அன்பும் ஆதரவும்மலை போன்றதாகும்'

இவ்வாறு சாவகச்சேரிப் பிராந்திய வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் சோமசுந்தரம் சரசாலை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெற்ற செல்வி சி. யோகவதியின் சேவைநலன் பாராட்டுவிழாவின் போது தெரிவித்தார்.

சரசாலை, ஆரம்ப சுகாதார நிலையத்தலைவர் திரு த. சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் வைத்திய கலாநிதி க. நடராசா, சுகாதாரபோதனையாளர் திரு கே வைத்தீஸ்வரன், தேசிய இளைஞர் சேவை அதிகாரி செல்வி விமலா வல்லிபுரம், இணக்க சபைத்தலைவர் திரு எஸ். நமசிவாயம், அறவழிப் போராட்டக்குழுவைச் சேர்ந்த திருவாளர்கள் எஸ். தங்கராசா, வீ எஸ். துரைராஜா உட்படப்பலர் பாராட்டுரை நிகழ்த்தினார்.

ஆரம்ப சுகாதார நிலையச் செயலாளர், செல்வி யோகவதிக்குப் பொற்கிளி வழங்கிக் கௌரவித்தார்.

## மின்தடை

சுண்டுக்குளி, செவ்.

நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் தற்போது இரவு வேளைகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவது ஒரு வழக்கமாகி விட்டது.

இப்பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் பெறப்பட்டுவந்தமின் இணைப்புக்கள் அகற்றப்பட்டும் மின் தடை ஏற்படுவதனால் பாடசாலை மாணவர்களும் வர்த்தக நிலையங்களும் தொழில் ஸ்தாபனங்களும்வெகுவாக பாதிப்படைவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

## கொள்ளை

வவனியா, செவ்

மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் நெற்சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் கொள்ளை இடம் பெற்றது.

ஆயுத பாணியானவர்களே இக்கொள்ளையினை நடத்தியதாக தெரிய வருகின்றது.

கொள்ளை போன பொருள்களின் விபரம் அறியமுடியவில்லை.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம் புதன்

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையிலான சிநேக பூர்வமான உதைபந்தாட்ட போட்டி எதிர்வரும் 31-ம் திகதி வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றும் பிரிவுகள் பங்கு பற்றுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. [பண்-திரு]

## கேதாரீஸ்வரர் மகிமை

மாவிட்டபுரம், செவ்.

கேதாரீஸ்வரர் விரதத்தின் மகிமை, அனுஷ்டிக்கும் முறைகள், அதனமூலம் ஏற்படும் பலாபலன்கள் பற்றிய நூல் ஒன்றை கட்டுவன் முத்துமாரி அம்பாள்தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது.

மேற்படி விரதம் அனுஷ்டிக்கப்படும் இச்சமயத்தில் பக்தர்களுக்கு பல்வேறு விளக்கங்களை அளிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்நூலை சிவாகம கிரியாரத்தினம் சிவஸ்ரீ கந்த. சிவபாத சுந்தரக்குருக்கள் ஆக்கியுள்ளார்.

இந்நூலில் பயனுள்ள பல்வேறு அம்சங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இளவாலை சென். ஹென்றீஸ் வெற்றி

பண்டத்தரிப்பு செவ்.

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும், மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் பிரிவில் 3-1 கோல்களினாலும், மூன்றாம் பிரிவில் 3-0 கோல்களினாலும் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி வெற்றியீட்டியது. [எ]

## "வடபகுதி கூட்டுறவு அமைப்புகள் ஒன்றிணைந்து

# மத்திய அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும்"

மாவிட்டபுரம் செவ்

"வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள கூட்டுறவு அமைப்புகள் ஒருமித்தநோக்குடன் இணைந்து செயல்படும் நிலையை உருவாக்கவேண்டும். எமது பிரதேச பொருளாதார, பாரம்பரிய, இறைமை ஆகியவற்றை இந்த அமைப்பின்மூலம் கட்டி வளர்க்கவேண்டும்".

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடந்த தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மகளிர் கழக ஆண்டுவிழாவிலும், 75 ஆவது ஆண்டு கூட்டுறவு தினவிழாவிலும் பிரதம அதிதியாக கலந்துரையாற்றிய யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறினார்.

மகளிர்கழகத்தலைவி திருமதி சசிதேவி கந்தையா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"வடபகுதியிலுள்ள சகல கூட்டுறவு அமைப்புகளும் ஒன்றாக இணைந்து மத்திய கூட்டுறவு அமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் அதேபோல் கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகள் இணைந்து மத்திய அமைப்பை உருவாக்கி இரு மத்திய அமைப்புகளும் ஒன்றுபட்டு எமது பிரதேச முன்னேற்றத்திற்கு உதவவேண்டும்.

"சேர் பொன் அருணாசலம் காலத்தில் பொருளாதார நோக்கில் கடனுதவி சங்கமாக உருப்பெற்ற கூட்டுறவு சங்கங்கள் இன்று பல துறைகளிலும் பணிபுரிகின்றன. சாதாரண மனிதன் ஒன்றுபட்டு இயங்குவது கூட்டுறவின் ஆரம்பநிலையாகும். மக்கள் இயக்கமான கூட்டுறவில் நிர்வாகசீர்கேடு, மூலதனபற்றாக்குறை, அரசு தலையீடு, மகளிரின் பங்கு இல்லாமை போன்றவற்றால் முன்னர் இவ்வியக்கம் சீர்குலைந்திருந்தது ஆனால் இன்று சிறப்பாக வளர்ச்சியடைந்து வருகிறது மேலும் மகளிர் கூட்டுறவு இயக்கத்தில் அதிக ஆர்வம் காட்டிவருவது பாராட்டத்தக்கது. கூட்டுறவு சங்கங்கள் மேலும் தமது பணிகளை அதிகரித்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்".

தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு. எஸ் சிவமகாராசா உட்பட பலர் உரையாற்றினர்.

போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு வைத்தியகலாநிதி கலாதேவி துரைச்சாமி பரிசில்கள் வழங்கினார்.

கூட்டுறவின் 75 ஆவது ஆண்டுநிறைவுவிழாவை தெல்லிப்பழை ப. நோ. சங்கம் ஏற்பாடுசெய்திருந்தது பொருட்காட்சி தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியில் இடம்பெற்றது (எ)

## இன்றைய பலன்

மாதம்: ஐப்பசி
திகதி: 12 (29-10-1986)
நக்ஷத்திரம்: பூரம் மு இ. வரை
திதி: ஏகாதசி பி ப. வரை

மேடம்: கடந்தகால நினைவுகளில் மூழ்குவீர்கள். விவசாயிகள் லாபமடைவர். பெரியவர் ஆசி நல்வாழ்க்கைக்கு வித்திடும்.

இடபம்: நல்வாழ்க்கை பிறக்கும். நீண்டநாள் அபிலாஷை இன்று நிறைவேறும். எதிலும் தூய்மையைக் காணுவீர்கள்.

மிதுனம்: சூழ்நிலையில் நல்ல மாறுதல் ஏற்படும் அமைதியான வாழ்வும் தெய்வத்தின் அருளும் கிட்டும். சுபதினம்.

கடகம்: பங்காளிகளுடன் பகைத்துக்கொள்வீர்கள். அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். தொழில் துறையிலும் நட்டமுண்டாம்.

சிம்மம்: ஏமாற்றம் தாக்கும். பொறுமையின் நிழல் தொடரும். அரசபயத்திற்கு இடமுண்டாம். வீண் பிரச்னைகளைத் தவிர்க்கவும்.

கன்னி: உதவிகள் பலப்படும். உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கு வழிபிறக்கும்.

துலாம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும். கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள் குடும்பத்திலும் பூசல்கள் தோன்றிமறையும்.

விருச்சிகம்: தொழில் முன்னேற்றமுண்டு. எண்ணியகருமம் கண்ணியமாய் முடியும். குடும்ப மகிழ்ச்சியுண்டு.

தனுசு: சுற்றுடலில் உங்கள் செல்வாக்கு வளரும். சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிட்டும். வணிகர்களுக்கு நன்று.

மகரம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் தாக்கமனப்பான்மை உருவாகும். தொழில் துறையிலும் தொல்லைகள் தென்படும்.

கும்பம்: சிலர் வாழ்க்கை உயர்வடையும். புதிய எண்ணங்கள் உருவாகும். நிர்வாகத் துறையிலும் திறமை பெறுவீர்கள்.

மீனம்: நம்பிக்கை மோசடி நடக்கும். விவசாயிகள் ஏமாற்றமடைவர். தொழிலில் கவனம் செலுத்தவும். மனத்திடம் விரும்பத்தக்கது.

திருமலை
வே. ரவீந்திரன்

## வல்வைப் பகுதி கலைஞர்கள் மூவருக்கு கௌரவப் பட்டம்

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வை நெடியகாடு சணசமூக? படிப்பக 20வது நிறைவுவிழா அரங்கில், வல்வைப் பகுதியைச் சேர்ந்த கலைஞர்கள் மூவர் கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டும் பொன்னாடைபோர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்

'போர்க்காலத்தில் பர்மா' என்னும் புத்தகத்தினை எழுதி வெளியிட்ட இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. முத்துக்குமாரசாமிக்கு 'மா அறிஞர்' என்ற கௌரவப்பட்டம் வழங்கப்பட்டது.

இலங்கை வானொலி பாடகரும் இலங்கை வானொலி சங்கீத விற்பன்னர்கள் தெரிவுக்குழுவின் முன்னைநாள் உறுப்பினருமான திரு ந. நடராசாவிற்கு "சங்கீத மாமணி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. இக்கௌரவப்பட்டம் வழங்கப்பட்ட மூன்றும் நாள் தனது 85வது வயதில் திரு. ந நடராசா சிவபதம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"உயிரினங்குமரன்", "பவளக்கொடி" போன்ற பல நாடகங்களில் நடித்தும், உருவாக்கியும் வல்வையில் பல இளம் நடிகர்களை உருவாக்கி 'அண்ணாவி' என்று அழைக்கப்படும் திரு எஸ் பரிசலீன் பிள்ளைக்கு "நாடக மாமணி" என்ற கௌரவப் பட்டத்தையும் வழங்கி கௌரவித்தனர்.

இப்படிப்பகத்தினால் நடாத்தப்பட்டுவரும் தையற்பாடசாலையில் நடந்த தையற்கலைக் கண்காட்சியிலும், தையற்கலைப் பரீட்சையிலும் விசேஷ சித்திபெற்ற செல்வி ஆர். சுபோதினி, செல்வி துரை, ஜயமதி ஆகியோருக்கும் சிறப்புப் பரிசு அளித்து நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (சி)

## எழுத்தாளர் ஒன்றியம்

பண்டத்தரிப்பு, செவ்

"இளவாலை மறை மாவட்ட எழுத்தாளர் ஒன்றியம்" என்ற பெயரில் கத்தோலிக்க இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான அமைப்பு ஒன்று அண்மையில் இளவாலையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு. அன்ரன் இராசநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்ற இதன் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் இளவாலை மறை மாவட்டத்தைச்சேர்ந்த மாதகல், பண்டத்தரிப்பு, சுன்னாகம், மயிலிட்டி, சில்லாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த பெருந்தொகையான கத்தோலிக்க எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர்.

## கோவில் குருக்கள் வீட்டில் நகைகள் கொள்ளை

உடுவில், செவ்.

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவில் குருக்கள் வீட்டில் ஆயுதந்தாங்கிய கோஷ்டியினர் பதினேழு தங்கப்பவுண் பெறுமதியான நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். 16ம்திகதிவியாழக்கிழமை இரவு இக்கொள்ளை இடம்பெற்றது.

இக்கொள்ளைபற்றி மேற்படி கோவில் குருக்களான பிரம்மஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்கள் பின்வருமாறு கூறினார்.

"16திகதிவியாழனன்றுஇரவு எட்டு மணியளவில் கோவில் பூசைகளை முடித்தபின் அருகில் உள்ள எனது வீட்டுக்குச் சென்றேன் வெளியில் கோவில் உதவியாளர் நின்றிருந்தார். அப்பொழுது இனந்தெரியாத துப்பாக்கி ஏந்திய மூன்று நபர்கள் வீட்டினுள் புகுந்தனர். கோவில் உதவியாளரையும் என்னையும், பனைவி, பிள்ளைகள் சகோதரி, பிள்ளைகள், அனைவரையும் துப்பாக்கிமுனையில் இருக்கவைத்து, வீட்டினுள் இருந்த சங்கிலி, காப்பு, மோதிரம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டனர் எனது மனைவி சகோதரி ஆகியோருடைய தாலிக்கொடிகளுடன் தாலியையும் அபகரித்தனர்.

"உயிருக்கு பயந்து சத்தமிடாது இருந்தபோதும் தாலியை மட்டும் திருப்பிக் கொடுக்குமாறு அவர்களிடம் கெஞ்சிக் கேட்டேன் தாம் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்றும் இயக்கத் தோழர்கள் பசியால் வாடுவதாகவும் அவர்களுக்கில்லாமல் உங்களுக்கு நகை வேண்டுமா என அவர்கள் எச்சரித்துவிட்டு வெளியேறிச்சென்றனர்".

கொள்ளையிடப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் ஐம்பதாயிரம் இருக்கும் என்றும் அவர் கூறினார். [எ]

## நல்லூர் வாலிபர் பாரிஸில் அகால மரணம்

(பாரிஸிலிருந்து எஸ். ஐ. ஜெயதீசன்)

பாரிஸில் வேலைத்தலம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த யாழ். நல்லூர் வடகிழக்கைச்சேர்ந்த சச்சி என அழைக்கப்படும் திரு வி. சச்சிதானந்தன் (வயது 32) எதிர்பாராத விதமாகச் சுவர் இடிந்து வீழ்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிலவாரங்களின் பின் மரணமானார்.

இது தொடர்பான விபரம் வருமாறு.

பிரஸ்தாப வாலிபர் தனிமையில் வேலை செய்து கொண்டிருந்தாகவும் அடுத்தடுத்த பகுதிகளில் வேலை செய்து கொண்டிருந்த இவருடைய சக ஊழியர்கள் சில மணி நேரங்களாக பிரஸ்தாப வாலிபரைக் காணாமையால் இவர் வேலை செய்த பகுதிக்குத் தேடிவந்து பார்த்தபொழுது இடிந்து வீழ்ந்த சுவருக்குள் இவர் அகப்பட்டிருந்ததைக் கண்டு அவசர அவசரமாக சுவர் கற்களை அகற்றிவிட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் கொண்டு சென்று அனுமதித்தனர்.

பலமாக தலைப் பகுதி தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவரைப் பரிசோதித்த டாக்டர்கள் இவருடைய தலையில் இருந்து ஏராளமான சிறுகற்களை அகற்றினர் இயற்கைச் சுவாசம் தடைப்பட்ட நிலையில் செயற்கைச் சுவாசம் கொடுத்து சுமார்மூன்றுவாரங்களுக்கு மேல் அவசர சிகிச்சைப்பகுதியில் இரவு பகலாகக் கவனித்தனர். எனினும் ஒக்ரோபர் முதலாம்திகதியளவில் இவர் மரணமானார். (சி)

## கைதானவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம். புதன்

நயினாதீவில் இம்மாதம் முற்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட பத்திரிகை விநியோகஸ்தர் திரு. ந. கருணாகர குருமூர்த்தி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இம்மாதம் 5ம் திகதி இவருடன் சேர்ந்து கைதுசெய்யப்பட்ட க. இரத்தினசபாபதி, இ. குலசிங்கம், க. பன்னீர்ச்செல்வன், ச. மதியழகன், பூ. ஜெயக்குமார் ஆகியோரும் கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டு அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## நூல் நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம் புதன்

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் புதிய நூலகப் பிரிவு ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிலையத்திற்கான புத்தகங்கள் யாவும் யாழ் ரோட்டரிக் கழகத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டதுடன் குழந்தைகளுக்கான மாலைநேர இலவச வகுப்பு ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ரோட்டறி கிராமக்குழு அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் மா. உதயகுமார், செயலாளர்கள் எஸ் ஆனந்தராஜா, மா. இலக்கணகுமார், தனாதிகாரி வே. சுந்தரம் உட்பட இருபது பேர்கொண்ட நிருவாகக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

## கவிதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம், புதன்.

யாழ் வண்ணை துர்க்கா வெளியீட்டகம் நடத்தும் 'நல்லூரான் திருவடியை நம்பு' என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா அடுத்த மாதம் 8ம் திகதி நல்லை ஆதீனத்தில் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் நடைபெறும். (சி)

## பொருட்காட்சி

கிளிநொச்சி, செவ்.

முரசுமோட்டைப் பிரிவு கொத்தணிப் பாடசாலை அமைப்பால் ஏற்பாடுசெய்யப்பட்ட கலை, விஞ்ஞானம், அறிவியல் பொருட்காட்சியை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம் மன்சூர் சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்தார்.

## நீதிமன்றங்கள்

நெல்லியடி செவ்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆதரவின் கீழ் வடமராட்சிப் பகுதியில் உள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் கிராம நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு வருகின்றன

இந்நீதிமன்றங்களின் நடைமுறை விதிகள், நீதிவழங்குவோரின் ஒழுக்க விதிகள் ஆகியன பற்றிய விபரங்கள் துண்டுப்பிரசுரங்கள் மூலம் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் பொதுக்கூட்டங்கள் மூலம் இவ்விபரங்கள் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு வருகின்றன.

## கந்தசஷ்டி விழா

மாவிட்டபுரம், செவ்

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டிவிழா எதிர்வரும் 2ம் திகதி முதல் ஆரம்பமாகி 8ம் திகதி வரை நடைபெற உள்ளது.

சைவமக்களின் முக்கிய விரததினமான கந்தசஷ்டியில் முருகனடியார்கள் விரதமிருந்து முருக வழிபாடு செய்ய விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இக்காலத்தில் திருச்செந்தூர் புராணபடனமும் மேற்படி ஆலயத்தில் சைவப்பெரியார்களினால் ஓதப்படும் [எ]

## பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி

மண்டைதீவு, செவ்.

இருபாலை பாரதி கலாமன்ற மாதர் சங்கத்தைச் சேர்ந்த யுவதிகளுக்கு பனம் பொருள் உற்பத்தி பயிற்சி வழங்குவதற்கான திட்டமொன்றை கோப்பாய் லயன்ஸ்கழகம் செய்து வருகிறது. பிரதேச மூலவளத்தைப்பயன்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பயிற்சியை ஆரம்பிப்பதற்கு இக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

இருபாலைக் கிராமப்பகுதியிலுள்ள பனைவளத்தைப்பயன்படுத்தும் வகையில் 25யுவதிகளுக்கு பனை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் கோப்பாய் லயன்ஸ் கழகம் பயிற்சி அளிக்கவுள்ளது. [வா]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லத்துரை கந்தசாமி
(கிளிநொச்சி இம்பீரியல் அச்சக உரிமையாளர்)
தோற்றம்: 28-9-1923
மறைவு: 8 11-1985
திதி: 29-10-1986

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்ப்பிரகாசித்து மனிதகுலத்தின் மதிப்பிடமாயும் எக்குலத்தில் வாழ்ந்து வழிகாட்டியாயும் திகழ்ந்த தெய்வமே! வெள்ளி மறைந்ததுபோல் மறைந்து எங்களை ஆறாத்துயரில் விட்ட அன்புத்தந்தையே ஓராண்டு ஓடிமறைந்தாலும் எங்கள் இதயத்தில் நீங்காத நினைவாய் நிழல்போல் நிற்கும் அன்பு ஐயா உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால்வாடும் அன்புமனைவி, பிள்ளைகள், சகோதரி, மருமக்கள், மைத்துனி, பிள்ளைகள். [C 5457]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



திரு. வயிரவன் மாலாணி
அன்னையின் மடியில்: 12 03-1917
இறைவனடியில்: 29-09-1986

மயிலிட்டி வடக்கை பிறப்பிடமாகக்கொண்ட வயிரவன் மாலாணி 29-09-86ல் சிவபதப்பேறு அடைந்தார். அன்னாரது அந்தியேட்டி கிரியை கீரிமலையில் 29-10-86ல் நடைபெறும். எங்கள் அன்பின் திருவுருவே, பண்பின் உறைவிடமே, கள்ளமில்லா வெள்ளையுள்ளம் கொண்டவரே, உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தில் அணையா தீபமாய் என்றும் ஒளி வீசுதையா. இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

அண்ணா, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்.
மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறை. [C 5448]

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ) வெற்றுச்சாக்கு

## கேள்வி விண்ணப்பம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட 3300 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப்பணம ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் பதிவுத் தபால் மூலம் "பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பமுடிவு திகதி: 31-10-86.

மேற்படி சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் கேள்விக் கூற்று மூலம் விற்பனைக்குண்டு. பொருட்களை காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

1. வெற்றுப் போத்தல்கள் 68 தனி 3/4 போத்தல.
2. பொலித்தீன் பை 8 1/2 கிலோ.
3. சுவீப்பிங் சீனி 115 கிலோ.
4. தறிநூல் சுற்றும் இரும்புக்கோல் 2900 தனி.

பொது முகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்
A 3021

## ஓராண்டு நினைவஞ்சலி




செல்வி செல்லப்பா இராஜநிதி (ராதா)
அன்னையின் மடியில்: 1963-04-13
ஆண்டவன் அடியில்: 1985-11-08
(திதி: 1986-10-29)

பண்பின் சிகரமே பாசத்தின் பிறப்பிடமே எங்கள் குலவிளக்கே, நீர்மறைந்து ஓராண்டு சென்றாலும் உமது அன்புத் திருவுருவமும், அருமை மொழிகளும் எங்கள் உள்ளத்தை விட்டு ஒரு கணமும் நீங்கவில்லை ராதா நீர் பூவாய் உதிர்ந்திருந்தால் பொறுத்திருப்போம் தாயே பிஞ்சாகிக் காயாகிக் கனியாகும் பருவத்தில் காலன் உம்மைக் கவர்ந்தானம்மா! கலங்குகின்றோம். கதறுகின்றோம் உன்பிரிவால்! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

ஆறாத்துயரில் வாடும்: அம்மா, ஐயா, சகோதரிகள், சகோதரர்கள், அத்தான்மார், அண்ணிமார், பெருமக்கள், மருமக்கள்
செல்லையா தீவு.
பூநகரி [C 5458]

மாணவர்முன்னணி — மறுமலர்ச்சி உதைபந்தாட்டப்போட்டி

# யாழ்ப்பாணக் கல்லூரியும், சாவகச்சேரி இந்துவும் வெற்றி



யாழ்ப்பாணம், புதன் விறுவிறுப்பான போட்டியில் மாணவர் மன்றமும், மறுமலர்ச்சி கழகமும் இணைந்து யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்கவுட்' போட்டியின் 3-ம் நாள் ஆட்டத்தில், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றன.

### யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையில நடைபெற்ற போட்டியில், யாழ்ப்பாணக் கல்லூரி மிகஇலகுவாக 4—0 கோல்களால் வெற்றி பெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னணி வீரர்களான ஜி ஜே யேசுராஜா மூன்று கோல்களையும், தேவானந்தன் ஒரு கோலையும் போட்டனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. டீ ஏ. எம். குணசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

### சாவகச்சேரி இந்து வெற்றி

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சாவகச்சேரி இந்து 2—0 கோல்களால் வெற்றி பெற்றது.

மானிப்பாய் மெமோறியல் கோஷ்டி சிறப்பாக விளையாடிய போதிலும் கோல்கள் போடும் பல கட்டங்களை நழுவ விட்டது குறிப்பிடத்தக்கது சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சார்பில் மகேந்திரனும், துஷ்யந்தனும் கோல்களைப் போட்டனர். சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்

(9ம் பக்கம் பார்க்க)


## தீபாவளி பண்டிகைகால மாபெரும் மலிவு விற்பனை

★ பட்டுச் சாறிவகைகள் ★ பனாரிஸ்
★ மணிப்புரி ★ தஞ்சூர் ★ காஞ்சிபுரம்
★ ஆரணியம் ★ சிபோன் மணிப்புரி
★ சிபோன் கஸ்மீர் ★ ஒக்கன்சா
★ பட்டு வேட்டி சால்வைகள்

இன்னும் ஜப்பான் சாறி வகைகள்
★ விக்ரம் ★ மங்கள சுதா
★ பத்மினி கோலாப்பூர் ★ லவ் மரீச்
★ ஈஸ்வரிக் குயின் ★ ஒபல் குயின்
★ வஜிராக் குயின் ★ கொம்பியூற்றர்
★ சிந்து பைரவி

இன்னும் பலரக சாறி வகைகளையும் அனைத்து மில் சேட்டிங், சூட்டிங் றெடிமெட் ஆடைகளும் தெரிவுசெய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்:

## சீமாட்டி

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சீமாட்டி, 8, நவீன சந்தை, சுன்னாகம்.
தொலைபேசி: 24413 24096
[C-5437]



# விவசாயிகளே!

உங்கள் நாற்று மேடைகளை அடி அழுகல், வேர் அழுகல்களை உண்டாக்கும் பங்கசுகளில் இருந்து காப்பாற்ற

● மோருட் டபிள்யூ.பி. 80% பாவியுங்கள்
(20 கி. - ரூ. 12/50, 100 கி. - ரூ 60/-)

உங்கள் விதைகள், இளம் நாற்றுக்களை பங்கசு நோய்கள் தாக்கா வண்ணம் காப்பாற்ற

● பொமசல் போர்டே டபிள்யூ.பி. 80% பாவியுங்கள்
100 கி. - ரூ. 27/-

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை.

BAYER

## ஹேகெம் லிமிட்டெட்,

400, டீன்ஸ் வீதி, கொழும்பு - 10.

இது ஒரு ஜேர்மன் தயாரிப்பு
[A 3022]

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்

# 1987-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரிச் சந்தையில் 01-01-1987 தொடக்கம் 31-12-1987 வரையும் வண்டில் காலையிலும், வாகனம் நிற்பாட்டும் இடங்களிலும் குத்தகை அறவிடுவதற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 07-11-86ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிபந்தனைகள்:

1. கேள்விக்காரர்கள் 06-11-86ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-ம், கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 25/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 15,000/- ஆகும்.

மற்றும் விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
தலைவருக்காக,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி

[A-3020]


## பிரயாண ஒழுங்குகள்

| இடம் | பெயர் | பாஸ்போட் இலக்கம் |
|---|---|---|
| உரும்பிராய் | S. வரதராஜன் | H 0348449 |
| மல்லாகம் | K A. வசந்தநாதன் | H 0225801 |
| மானிப்பாய் | N S சிவகுமார் | G 0345932 |
| உரும்பிராய் | T. அருமைநாதன் | G 0166398 |
| யாழ்ப்பாணம் | N. சுந்தரலிங்கம் | G 0021930 |
| நல்லூர் | P. லோகநாதன் | E 2568 5 |
| அச்சுவேலி | T L. C. சேவியர் | H 0380905 |
| ,, | M. V. ஆனந்தராஜா | H 0457285 |
| ,, | R. மகேந்திராஜா | J 0036946 |
| உடுவில் | N. நவசீலன் | G 0145490 |
| ஊர்காவற்றுறை | J. வலென்ரீன் | F 196209 |
| வேலணை | S உதயகுமார் | J 0015130 |
| கந்தர்மடம் | V. விஜயகுமார் | J 0041152 |
| தெல்லிப்பளை | V. வரதராஜா | G 0053085 |
| கந்தர்மடம் | R. பாஸ்கரன் | H 0370041 |
| உரும்பிராய் | S. சிறீதரன் | H 0467233 |
| கந்தர்மடம் | S. ஜெயராஜலிங்கம் | H 0008227 |

மேலே குறிப்பிட்ட பெயர்கள் கொண்ட அனைவருக்கும் ஈராக்குக்கு விசா வந்துள்ளது. உடனடியாக எமது காரியாலயத்துக்கு வந்து சந்திக்கவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 2827]



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்து செல்வார்.

குவைத்தில் கீழ்க்காணும் வருமானவாய்ப்புக்கள் உண்டு. Cleaners, house boys, Gardeners, House drivers, house Cook, Sales boys and Girls ஆகியவற்றிற்கு செல்லவிரும்புவோர் உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி Labourers ஆக செல்லவிரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்லவிரும்புவோர் 1-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-
**N. Bala**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

ஐஸ் இல. 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி திவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் கிளை அலுவலகம் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

[A-2817]


## கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பம்

பருத்தித்துறை, செவ்

புலோலி கிழக்கு பிரஜைகள் குழுவின் முயற்சியையடுத்து கடந்த ஐந்து ஆண்டுகளாக ஸ்தம்பித்திருந்த சந்தாதோட்டம் முதலி அம்பாள் ஆலய கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்ஆலய கட்டிட நிர்மாண வேலைகள் அப்பகுதி மக்களுக்கிடையே ஏற்பட்ட இழுபறியினால் ஸ்தம்பித்திருந்தன. இதனையடுத்து பிரஜைகள் குழு அப்பகுதி மக்களைக்கூட்டி இவ் ஆலய கட்டிட வேலைகளைத் தொடர்ந்து நடாத்த தீர்மானித்து ஆலயத்திற்கான கட்டிட நிர்மாணக்குழுவொன்றையும் தெரிவு செய்தது.

இக்குழுவின் தலைவர் வ. கணபதிப்பிள்ளை உப தலைவர் வே. ஜெயந்திரபோஸ், செயலாளர் என். நாகேந்திரன் உப செயலாளர் க. கணேசு, பொருளாளர் சி சிற்றம்பலம், உறுப்பினர்களாக சி சரவணபவ, வே. பொன்னுத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி குழுவினர் ஆலய கட்டிட நிர்மாண வேலைகளை வெகு விரைவில் பூர்த்தியாக்கி மாசி மகா தினத்தன்று கும்பாபிஷேகத்தை நடாத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராசநாயகம் துரைச்சாமி
(முன்னாள் மாவை கிராம விதானையார்)

மண்ணுலகு:
10-10-1907

விண்ணுலகு:
09-11-1985

ஓராண்டு திதி:
29-10-1986

அன்புடனே வளர்த்து அறிவுரைகள் பல நல்கி வாழ்வாங்கு வாழ வழி வகுத்த அன்புத் தந்தையே! குடும்பத்தின் ஒளிவிளக்காய் குணக்குன்றாய் விளங்கி நற்போதனைகள் பலநவின்று நல் வழியில் எங்கள் இல்லறத்தை இயங்கவைத்த எம்மினிய மாமாவே!! நாவுக்கினிய நல்லுணவுப் பண்டங்களும் காதுக்கினிய கருத்து நிறை திருமுறையும் பண்பாக ஊட்டி மகிழ்வித்த பாட்டாவே!!! நீங்கள் அமரராகி ஆண்டொன்று ஆகிடினும் உம்நினைவு எம்மனதில் ஊசலாய் ஆடிடுமே. ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தனை புரியும்: மகன், மருமகள், பேரர்கள்.

C 5446

## சுகாதார கருத்தரங்கு

உடுவில், செவ்.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை உடுவில் உபஅலுவலக பகுதிக்கான ஆரம்ப சுகாதார பராமரிப்பு சம்பந்தமான கருத்தரங்கொன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை உபஅலுவலக பொது சன நூலகத்தில நடைபெற உள்ளது.

இவ் உபஅலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு இ கணேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ள இக் கருத்தரங்கில் தெல்லிப்பழை வைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன், யாழ் சுகாதார கல்வி அதிகாரி கா. வைத்தீஸ்வரன் சுகாதார போதனாசிரியை திருமதி தி துரைசிங்கம் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர். (சி)

## சுகாதாரக கல்வி பயிற்சி வகுப்பு

மண்டைதீவு, செவ்.

"சுகாதாரக்கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான பயிற்சிவகுப்பொன்று காரைநகரில் நடைபெற்றது. இப் பயிற்சி வகுப்பில் காரைநகர் பகுதி பாடசாலை ஆசிரியர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

காரைநகர் வாரிவளவு நல்லியக்கசபை மண்டபத்தில் நடைபெற்ற இச் சுகாதாரக் கல்விப் பயிற்சியை வைத்தியகலாநிதி செ. சு. நச்சினார்கினியன் நடத்தினார். பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு இதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (வா)


## குளிர்சாதனப் பெட்டிகள் (REFRIGERATORS)

பாவனையாளர்களுக்கு

# ஓர் நற்செய்தி!

★ எல்லாவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும், டீப்பிறீசர்களும் எமது அனுபவமிக்க தொழில் நுட்ப வல்லுநர்களால் உங்கள இல்லத்தில்வைத்து பிழைகளை முன்னிலும் பார்க்க குறைந்த செலவுடன் திருத்திக் கொடுக்கப்படும்.

★ விரும்பிய வசீகரமான வர்ணங்களில் எமது வேலைத்தளத்தில் வைத்து பெயின்ற் அடித்துக் கொடுக்கப்படும்.

எம்மோடு தொடர்புகொண்டு இவ்வரிய சேவைகளைப் பெறுக்கொள்ளவும்.

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெற்,**
484, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 22134 — 23819

(A-3010)



## பிரயாண ஒழுங்குகள்

| இடம் | பெயர் | பாஸ்போட் இலக்கம் |
|---|---|---|
| அளவெட்டி | K. T. தவராஜா | H 0209002 |
| யாழ்ப்பாணம் | I A C ஜஸீர் | J 0000022 |
| வேலணை | P சுந்தரலிங்கம் | J 0(34550 |
| | K K கோபாலசிங்கம் | H 0361132 |
| | T. மரியநேசன் | H 0300646 |
| நெல்லியடி | J. ஜெகசோதி | G 0 9`562 |
| | S M. தர்மசீலன் | H 0304685 |
| | S K. நாஞ்சில்மனோகரன் | H 0364731 |
| | K. செல்வகுமார் | H 0282815 |
| | S. சரலோகநாதன் | F 121178 |
| | S. செல்வராஜன் | G 0322931 |
| | R. அழகராஜா | H 034 912 |
| | T. அல்பிரட் | H 0401420 |
| | V. N. நற்குணநாயகம் | J 0040415 |
| | K. சிவநாதன் | G 0077694 |
| | R S. நந்தகுமார் | H 031·826 |
| | P மகேந்திரன் | G 01`2911 |
| | R. T இராஜேந்திரன் | H 0087104 |
| | N. மகேந்திரம் | G 0323566 |
| | N. வடிவேலு | F 202887 |
| | S இராசலிங்கம் | G 0344253 |
| | V. K. நித்தியநாதன் | H 0376317 |
| | S. T வசந்தராஜா | H 0434983 |
| | A. K. உதயராஜா | H 0314269 |

மேற்குறிப்பிட்ட பெயர்கொண்ட நபர்களுக்கு 'ஈராக்'குக்கு விசா வந்துள்ளது, உடனடியாக எமது காரியாலயத்திற்கு வந்து தொடர்புகொள்ளவும்.

**யூனிவேசல் ஏஜென்சி,**
125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

பி. கு.: ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை, பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக

(A-2823)

## ஸ்ரீலங்கா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எழுவைதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களுக்கு ஈழம் தபாற் தலைகளைத் தவிர்த்து சிறிலங்கா தபாற்தலைகளைப் பாவிக்குமாறும் வேண்டுகின்றேம் தொடர்ந்தும் குடாநாட்டிற்குள் உள்ளூர்ச் சேவைகளுக்கு மேற் குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களுக்குச் சிறிலங்கா முத்திரைகளின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## யாழ்ப்பாணக்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டிக்கு திரு. ஜே. ஏ. அகஸ்ரின் மத்தியஸ்தம் வகித்தார்.

## இன்றைய ஆட்டங்கள்

இன்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் முதலாவது போட்டியில், அத்தியார் இந்துக் கல்லூரியும் - விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதும். 2-வது போட்டியில், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியும்-நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதும். [வி]

## தமிழ் மக்களின்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்தியாளர்களின் கேள்வியொன்றுக்குபதிலளித்த திரு ராமச்சந்திரன் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தியும், தமிழகமுதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரனும் இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதில் மிகஅக்கறையுடன் இருப்பதாகவும், இலங்கை அரசுக்கும், தமிழர்விடுதலைக் கூட்டணிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்து அரசியல்சாசன நிபுணர்கள் புதியயோசனையொன்றை உருவாக்கி வருவதாகவும் இன்னும் சிலநாட்களில் இதுதமிழ் போராளிகளிடம் கையளிக்கப் படுமென்றும் தெரிவித்தார். [ஒ]

### கடைசி நேர வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

மரியநாயகம் புளோறிமன் அஞ்சலோ என்பவருடைய அடையாளஅட்டை யாழ். பெரிய கடைப்பகுதியில் தவறி விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவர்க்கு அனுப்பிவைக்கவும். தர்சினி ஒலிக்காட்சி ஒலிபரப்புச் சேவை, சுருவில் றோட், கரம்பன், ஊர்காவற்றுறை. (C-5477)

வெலிங்டன்
10-30, 2-30, 4 30, 6-30
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
[Adults Only]
தீபாவளி வெளியீடு
சிவகுமார்-ராதிகா நடித்த
நிலவு சுடுவதில்லை

லிடோ
இன்று முதல்
10-30, 2-30 4-30, 6-30
HolCroft Convenant
[Full of Suspense and Action] [Color]

## மட்டு. ஆயர், சாம். தம்பிமுத்து கொழும்பு விஜயம்

கொழும்பு, செவ்

மட்டு. பிரஜைகள் குழுச் செயலர் திரு சாம் தம்பிமுத்து, மட்டு. ஆயர் வண. பிதா கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்துள்ளனர்

இப்பிராந்தியத்தில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வளிப்பது சம்பந்தமாக அரச சார்பற்ற ஸ்தாபனங்களிடம் பேச்சு நடத்தவே இருவரும் கொழும்பு விஜயம் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (கூ-ஊ)

## அரச அறிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கா [33 வயது], பண்டார (30 வயது] விமல [28 வயது] விநாயகமூர்த்தி [38 வயது], ஹேலி [28 வயது]. நிஹால் [22 வயது] ஆகியோரே காயமடைந்துள்ளனரென அவ்வறிக்யைில் மேலும் கூறப்பட்டுள்ளது. [ஒ]

## மத்திய---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணியில் கூட்டணி ஈடுபடவேண்டும் என இந்திய அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர். ஆயினும் தீவிரவாதிகளின் பங்கின்றி கூட்டணி ஈடுபடும் எந்த நடவடிக்கையும் வெற்றிபெற மாட்டாது என இந்திய அதிகாரிகள் சருதுவதனால் தீவிரவாதிகளின் இந்த விருப்பம் கைகூட வாய்ப்பில்லை.

இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பது தொடர்பான முயற்சிகளில் ஈடுபட இந்தியாவில் பல அதிகாரிகள் உள்ளபோதிலும் முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் அவர்களில் யாருக்குமில்லை. [கூ-ஊ]

## புதிய தளபதி

கொழும்பு, செவ்வாய்

இலங்கைக் கடற்படையின் புதிய தளபதியாக ரியர் அட்மிரல் ஆனந்த சில்வா பதவியேற்கவுள்ளார். தற்போதைய தளபதி வைஸ் அட்மிரல் அசோகா டி சில்வா இம்மாதம் 31-ம் திகதி ஓய்வு பெறவுள்ளதையடுத்தே இவர் நியமனம் பெறுகிறார்.

## நால்வருக்கு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண் அம்பிகா (14 வயது) ஆகியோருட்படப் 13 பேரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

மீரா சாஹிப் (65 வயது), யோசேப் (50 வயது). மட்டக்களப்பு கூளாவடி கொலனி, தங்கவேல் (38 வயது), மட்டக்களப்பு, அல்பேட் (48வயது) நாவலடி ஆகியோரே ஊர்காவற்படையின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர்கள்.

இச்சம்பவத்தின் போது மட்டக்களப்பு பிரஜைகள் குழுசெயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்துவுக்குச் சொந்தமாள வீடொன்றும் ஊர்காவல் படையினரால் உடைக்கப்பட்டு விலை உயர்ந்த பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

ஊர்காவற் படையினர் மட்டக்களப்பு நகர வீதிகளில் ஆவேசமாக நடந்து திறந்திருந்த கடைகளை மூடிவிடும்படி உத்தரவிட்டனர். வீதிகளில் நடமாடிய பொது மக்களை கண்டபடி தாக்கினர். சிலரை மட்டக்களப்பு கோட்டைமுனை வாவிக்குக் கொண்டுசென்று நீருக்குள் நிற்கவைத்துத்தாக்கினார்கள்.

பதற்றமடைந்த நிலையில் இருந்த நகரை நோக்கி திடீரென விஜயம் செய்த மட்டக்களப்பு இணைப்பதிகாரி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

இச்சம்பவத்தையடுத்து நேற்றுக் காலை 10 மணிக்குப் பின்னர் நகரம் வெறிச்சோடி மயானஅமைதியில் மூழ்கியது. (மா)

## "லயன்ஸ் கழக" உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், செவ்

மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக "பி" அணிக்கும் ஊறணி புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் கண்ணகி விளையாட்டுக்கழகம் 12—1 கோல்களால வெற்றியீட்டியது.

மாவை லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்து நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியிலேயே கண்ணகி விளையாட்டுக்கழகம் இப்பெரு வெற்றியீட்டியது.

லயன்ஸ் கழகத்தலைவர் திரு பி. ஜே. அந்தோனிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை லயன்ஸ் கழக விளையாட்டுத்துறை பொறுப்பாளர் திரு.க. தர்மகுலசிங்கம் ஏற்பாடு செய்துள்ளார்.

இது வரை நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வருமாறு:- முதலாவது சுற்றுப் போட்டி முடிவுகள்; காங்கேசன் துறை இளம் றோயல் விளையாட்டுக்கழகத்தின் "பி" அணி காங்கேசன்துறை வொன்றெஸ்ற் கழகத்தை 7—0 கோல்களால வென்றது. லங்கா சிமெந்து லிமிட்டெட் "ஏ" அணி காங்கேசன்துறை சிமெந்து பொழுது போக்கு விளையாட்டு கழக அணியை 4—1 கோல்களால் வென்றது.

மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக "பி" அணி ஊறணி புனித அந்தோனியார் விளையாடடுக் கழகத்தை 12—1 கோல்களால் வென்றது.

காங்கேசன்துறை இளம் றோயல் விளையாட்டுக்கழகத்தின் 'ஏ" அணி லங்கா சிமெந்து லிமிட்டட் "டி" 5—0 கோல்களால் வென்றது.

மாவை ரட்ணம்ஸ் விளையாட்டுக் கழகம் மயிலங்காடு ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தை 6—1 கோலால் வென்றது.

தெல்லிப்பழை கிருஸ்கோப் போஸ் விளையாட்டுக் கழக "ஏ" அணி மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக "ஏ" அணியை 3—0 கோல்களால் வென்றது.

அளவெட்டி இளம் விளையாட்டுக்கழகம் காங்கேசன் துறை இளம் சமூக விளையாட்டுக்கழகத்தை 5—0 கோல்களால் வென்றது

இரண்டாவது சுற்றுப் போட்டி முடிவுகள்வருமாறு:

மாவை ரட்ணம்ஸ் விளையாட்டுக்கழகம் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக "பி" அணியை 4—1 கோல்களால் வென்றது.

அளவெட்டி இளம் விளையாட்டுக்கழகம் காங்கேசன் துறை இளம் றோயல் விளையாட்டுக்கழக 'ஏ" அணியை 3—0 கோல்களால் வென்றது. (வா)

## நலன்புரிச் சங்கம் கோரிக்கை

பருத்தித்துறை செவ்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நீக்க ஆவன செய்யுமாறு வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான திரு.வி. எம் பஞ்சலிங்கம் யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு என். கனகசபை ஆகியோருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் இல்லாமையினால் சிகிச்சை பெறும் நோயாளர்களும் இங்கு பயிற்சி பெறும் உதவி வைத்திய மாணவர்களும் பெரும் பாதிப்படைந்துள்ளனரென்றும் இங்கு 'எக்ஸ்றே' கருவி இல்லாமையினால் நோயாளர்கள் பெரும் அல்லற்படுகின்றனரென்றும் சுட்டிக்காட்டியுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கம் இவ் வைத்தியசாலைக்கு சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் ஒருவரை வருவிக்கவும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்கேட்டுள்ளது.

## PRIESTS RETREATS

The Annual Retreats of the Jaffna/Mannar Fathers will take place at the Pandateruppu Retreat House.

1st Group: From Sunday, November 2nd/evening to Saturday 8th morning.

2nd Group: From Sunday, November 16th evening to 22nd Saturday morning. This will not be at Madhu Church as announced earlier, but will take place at the Retreat House, Pandateruppu.

BISHOP OF JAFFNA

(C-5479)

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார திணைக்களம்
### யாழ்ப்பாணம் பெரும்பாகம்
### பால் தவிர்ந்த உணவு வழங்கல்

1987-ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பெரும்பாகத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி மூற்பகல் 10-00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முழு விபரங்களுக்கும் 16-10-1986 ல் வெளிவந்த அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சு. சே. பி. பணிமனை,
யாழ்ப்பாணம், 28-10-86,

[A 3025]

The Best In Jaffna
for
★ Food ★ Service ★ Comfort
ALSO
Beer Garden
[on Every Saturdays, Sundays]
BEER on SPECIAL RATE with OMELETTE RS 30/-
HOTEL GNANAMS
229, Clock Tower Road,
Jaffna.
T. Phone; 22082-23067 [A2835]

மீண்டும்
போட்டோஸ்ரட் சேவை
இரவு பகல் போட்டோஸ்ரட்
பிரதிபண்ணும் சேவை செய்யும்
ஒரே ஸ்தாபனம்
நியூவிக்ரேஸ்
"எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்"
23, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23532
(A 2834)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 29-10-86

## ஜனாதிபதி - ராஜீவ் பெங்களூர் சந்திப்பின்முன்
# அரசின் யோசனைகள் தொடர்பாக
# போராளிகள்கருத்துதெரிவிக்கவேண்டும்

புதுடில்லி, ஒக். 28

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக இலங்கைஅரசு சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்குரிய தமது தீர்க்கமான கருத்துகளை தமிழ்ப்போராளிகள், அடுத்த மாதம் இந்தியப்பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் பெங்களூரில் சந்திக்கு முன்னர் தெரிவிக்க வேண்டுமென [illegible] இந்தியா கூறியுள்ளதாக 'பி.ரி.ஐ' செய்திஸ்தாபனம் அறிவிக்கின்றது.

இதேவேளை, கடந்த ஞாயிறன்று தமிழ்ப் போராளிகளை தமிழக முதல்வர் சந்தித்தபோது இலங்கையில் இரு தேசிய இனங்கள் உண்டு என்பதை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டுமென வலியுறுத்தியதாகத் தெரிகிறது. இந்திய அரசு, ஐக்கிய இலங்கை என்ற கட்டுக்கோப்புக்குள் தீர்வுகாண போராளிகள் இணங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஊ)

## ராஜீவ் நம்பிக்கை

புதுடில்லி, அக் 28

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான இப்போதைய யோசனைகள் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒருவழி யேற்பட உதவும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி நம்பிக்கை தெரிவித்துள்ளார்

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற முப்படைகளின் கூட்டு மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். [ஒ]

## அமைச்சர்இராசு பாராட்டு

சென்னை, அக் 28

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் இந்திய அரசின் கோரிக்கைகளுக்கிணங்க தமிழ் நாடு முதல்வர் திரு. எம் ஜி ராமச்சந்திரன் தமிழ்போராளிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது பாராட்டிற்குரியது என்று இந்து கலாசார அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை தெரிவித்தார்.

சென்னையில் நேற்று இத்தகவலை வெளியிட்ட திரு இராசதுரை இந்த முயற்சியின் பயனாக இலங்கை பிரச்னைக்கு சுமுகமான தீர்வு ஏற்படும் என்று தெரிவித்தார். [ஒ]

## தங்க உருண்டை கடத்த முயன்ற
# தமிழ் இளைஞர்
## விமானநிலையத்தில் கைது

கொழும்பு, செவ்.

தேயிலைப்பெட்டிக்குள் தங்க உருண்டைகளை வைத்துக் கடத்தமுயன்ற தமிழ்இளைஞர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் நேற்று நடைபெற்றது. இத் தங்க உருண்டைகளின் பெறுமதி சுமார் 30 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விளைஞர் பின்னர் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது விதிக்கப்பட்ட அபராதத் தொகையை கட்டியதையடுத்து இவர் விடுதலை செய்யப்பட்டார். [ஊ]

## கதிரமலை நினைவாக சமாதானவாரம்

கொழும்பு. செவ்

வன்னி மாவட்ட சர்வோதய கிளையின் முன்னாள் தலைவர் திரு கதிரமலையின் நினைவாக ஆண்டுதோறும் சமாதான வாரம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இத்தகவலை சர்வோதய தலைவர் கலாநிதி ஏ. ரி ஆரியரட்ன தெரிவித்துள்ளார்.

## பரு. பிரஜைகள் குழு
# ஷெல் தாக்குதல் குறித்து கண்டனத் தீர்மானம்

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறை கூட்டுபாதுகாப்பு முகாமிலிருந்து பருத்தித்துறை மெதடிஸ்தபெண்கள் உயர்தரக் கல்லூரிப்பக்கமாக இராணுவத்தினர் மோட்டார் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு பருத்தித்துறை பிரஜைகள்குழு பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாகப் பருத்தித்துறை முகாமிலிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டபோது பலர் காயமடைந்துள்ளதுடன் பல வீடுகள் சேதமடைந்துமுள்ளன.

அடிக்கடி இக்கல்லூரிகளுக்கு அருகாமையில் இராணுவத்தினரின் மோட்டார் ஷெல்கள் விழுந்து வெடிப்பதனால் இக்கல்லூரிகளுக்கு மாணவிகளை அனுப்பும் பெற்றோர்கள் பெரும அச்சமடைகின்றனர். இக்கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவிகளும், ஆசிரியர்களும் பெரும் பீதியடையவேண்டியுள்ளது

இதனையடுத்து இக்கல்லூரிகள் பக்கமாக பருத்தித்துறை இராணுவத்தினர் மோட்டார் ஷெல் தாக்குதல்களை நடாத்துவதற்குப் பருத்தித்துறைப்பிரஜைகள்குழு பலத்த கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

அண்மையில் நடைபெற்ற 5-ம் வகுப்பு புலமைப்பரிசில பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து தோற்றிய மாணவர்களின் முடிவுகள் நாளை அறிவிக்கப்படும் எனத் தெரியவருகிறது. (ஊ)

## உயர்தர பரீட்சை முடிவுகள் நாளை கல்லூரி அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம், புதன்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளுக்கு யாழ் மாவட்டத்திலிருந்து தோற்றிய மாணவர்களின் முடிவுகளை நாளை வியாழக்கிழமை காலை யாழ் கல்வித்திணைக்களத்தில் கல்லூரி அதிபர்கள் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் யாழ்கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இப்பரீட்சை முடிவுகளை தம்முடன் எடுத்துவரவுள்ளார். (ஊ)

## தொழில் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, செவ்

சேமலாபநிதி கணக்குப் புத்தகங்களைப் பெறும் ஊழியர்கள் அவற்றை மத்தியவங்கியில் சமர்ப்பித்துத் தமது சேமலாபநிதிக் கணக்கு விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்று தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

சேமலாபநிதிப்பிரிவில் அங்கத்துவம் பெற்றுள்ள சுமார் 37 லட்சம் ஊழியர்களுள் பத்துலட்சம் ஊழியர்களுக்கு அண்மையில் தொழில் திணைக்களத்தினால் சேமலாப நிதிக் கணக்குப்புத்தகங்கள் வழங்கப்பட்டது தெரிந்ததே.

சேமலாபப் பிரிவில் எஞ்சியுள்ள 27 லட்சம் ஊழியர்களுக்கும் 1987 ம் ஆண்டுமுதல் ஆறுமாத காலத்துக்குள் சேமலாப நிதிக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டுவிடும் என்றும் தொழில் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது. [வா]

## நெருக்கடியைத் தவிர்க்க
# ஆரியகுளம் பகுதியை வியாபாரிகள் பயன்படுத்தலாம்
## -யாழ். ஆணையாளர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்.நகரின் நவீன சந்தை பஸ்நிலையப் பகுதிகளில் போக்குவரத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய இடைஞ்சலை நீக்கும் வகையில் அங்குள்ள அங்காடி வியாபாரிகளை ஆரியகுளம் சந்தியை அண்மித்த பகுதிகளுக்குச் சென்று வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி வி கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக திரு. சிவஞானம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ். நகர மத்தியிலுள்ள நவீன சந்தை பஸ் நிலைய பகுதிகள் எல்லாவற்றிலும் போக்குவரத்துக்கு பாரிய இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடிய வகையில் அங்காடி வியாபாரிகள் இடம்கொண்டிருப்பது அவதானிக்கப்படுகிறது. இவற்றை ஒழுங்குபடுத்துமாறும் அகற்றுமாறும் பல்வேறு கோரிக்கைகள் எமக்கு விடுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்திற்கொண்டு அங்காடி வியாபாரிகள் மேற்குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து விலகி ஆரியகுளம் சந்தியை அண்மித்த ஸ்ரான்லி வீதி பகுதிக்கு சென்று இந்த வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (மா)

## தமிழ் அகதிகள் ஐக்கியமுன்னணி வேண்டுகோள்

சென்னை, அக் 28

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து தமிழகம் வந்துள்ள அகதிகளுக்கு தீபாவளிக்கு புத்தாடை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்துள்ளோர் ஐக்கிய முன்னணி தமிழக முதல்வரை வேண்டியுள்ளது. [ஒ]

## மரண அறிவித்தல்

### திரு. A. செல்லத்துரை
[உரும்பிராய்]
[இளைப்பாறிய பிரதம புகையிரத நிலைய அதிபர்]

திரு A செல்லத்துரை காலமானார். இவர் சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், சந்திரகலா, தயாளினி, கிருபாளினி, கருணாலினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் [26-10 86] ஞாயிற்றுக்கிழமை உரும்பிராயில் நடைபெற்றன உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பாலா செல்லத்துரை
[C 5471]

### இராமுப்பிள்ளை சிவதாஸ்

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அச்சுவேலி வாசியுமாகிய சிவதாஸ் [பிரகாஸ் அடைவு கடை உரிமையாளர் கிளிநொச்சி] காலமானார் இவர் இராமுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், கருணாதேவியின் அன்புக்கணவரும், பிரகாஸ்பதி [யாழ் பரியோவன் கல்லூரி] யின் அன்புத்தந்தையும், தேவி, இரட்ணமயில் ஆகியோரின் சகோதரரும், மயில்வாகனம் தம்பதிகளின் மருமகனும், சாந்தநாயகி, விமலாதேவி, ஆலாலசுந்தரம் [நிதியாளர் யாழ் பல்கலைக்கழகம்], பத்மதேவி சகாதேவன் [மீன்பிடிக் கூட்டுத்தாபனம்], சத்தியபாலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 29-10-86 பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெறும்.

தகவல்: ஆலாலசுந்தரம்.
சன்னதி வீதி,
அச்சுவேலி.

[C5480]

### வே. வல்லிபுரம்
(பிரபல சோதிடர்)

கட்டுவன் மேற்கைச்சேர்ந்த வே. வல்லிபுரம் காலமாகிவிட்டார். இவர் சிதேவிப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராசகுலசிங்கம் [சவுதி], தர்மகுலசிங்கம் [கனடா], சிவநேசசிங்கம், நவரத்தினசோதி, ஞானமலர், சதானந்தவதனா, குவானந்தவதனா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு. சுப்பையா, திரு அமுதலிங்கம் [சவுதி] ஆகியோரின் மாமனுமாவார் அன்னாரின் ஈமச்சடங்குகள் 29-10-86 [இன்று] புதன்கிழமை பகல் 12-00 மணிக்கு கட்டுவன் கொத்தியாகல் மயானத்தில் நடைபெறும்.

(C 5476)
தகவல்: சிவநேசசிங்கம் [மகன்]

## மரண அறிவித்தல்

### நாகமுத்து விக்னராஜா (கரம்பன் கிழக்கு)

நீர்கொழும்பு முன்னைநாள் வர்த்தகர் நாகமுத்து விக்னராஜா காலமானார். இவர் மங்களத்தின் அன்புக் கணவரும், சபாநாதன் [சாரதாஸ் நீர்கொழும்பு], தில்லையம்பலம் [சின்னக்கிளி] R S T. 5-ம் குறுக்குத் தெரு, கொழும்பு], சச்சிதானந்தன் [ஆசிரியர், யூனியன் கல்லூரி], கனகாம்பிகை, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகசபாபதி [கனடா], நடராஜா [வவனியா], கமலாதேவி, சுந்தரலட்சுமி, கலைமகள் [ஆசிரியை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம், சொர்ணம், ரூபா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [29-10-86] பிற்பகல் 200-மணியளவில் சுருவில் மயானத்தில் நடைபெறும்.

தகவல்: சு. வீரசிங்கம்
சுருவில், ஊர்காவற்றுறை.
(C-5481)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126.